

# ஸ்ரீ சேஷ ஒளி

## திருவருட்சுடர்



நிர்வாக ஆசிரியர் : குருஜி கே.வி.எல்.என். சர்மா

ஒளி – 3 காலாண்டிதழ் - அக்டோபர்-டிசம்பர் 2009 விலை ரூ.5 கதிர்–4

## மக்கள் சேவையே மகேசன் சேவை!



நம் பாரத நாடு பழம் பெரும் நாடு. பண்பாட்டிற்கும் கலாசாரத்திற்கும் எடுத்துக் காட்டாக விளங்கும் நாடு. நதி வளமும், நில வளமும் நிறைந்து இயற்கை எழில் கொஞ்சும் நமது தேசத்திற்கு அழகுக்கு, அழகு சேர்ப்பது போல் அணிகலன்களாக அலங் கரிப்பவர்கள், நமது சித்தர் களும் மகரிஷிகளும். தத்துவ நெறிகளை வேத நெறிகளோடு இணைத்து தத்துவார்த்த விஷ யங்களைக் கொடுத்து நம்மை நாம் உணர்ந்தால் இறை நிலை அடையலாம் என்ற உண் மையை நிரூபித்தவர்கள் நமது சித்தர்கள்.

அவர்கள் நமது கலாசாரத் தையோ, பண்பாட்டையோ சிதைக்கவில்லை, கெடுக்கவும் இல்லை. இயற்கையோடு இயற்கையாக வாழ்ந்து, இறை சக்தியின் செயல்பாடுகளை வெளிக்காட்டி மக்கள் மனதில் தெளிவு கொடுத்து சமுதாய நலப்பணிகளின் மூலம் மக்களுக்கு உதவியவர்கள்தான் நமது 18 சித்தர்கள்.

அவர்களது ஆலயத் திருப்பணி நிறைவுபெற்றது மனதிற்கு மகிழ்ச்சிதான். ஆனால் அவர்கள் விட்டுச் சென்ற பணிகளையும், அவர் களது அடிச்சுவடுகளையும் நாம் பின்பற்ற வேண்டாமா? அதன் பயனாக உதித்ததுதான் நமது அறக்கட்டளையின் சமு தாய நலப்பணிகள்.

கடந்த 10 ஆண்டுகளாக இலவச மருத்துவ முகாம் நடத்தி, அன்னதானம், குழந்தை களுக்கு இலவச பால் விநியோ கம், மருத்துவ உதவி, கல்வி உதவி இவை அனைத்தும் இயன்ற அளவில் நடைபெற்று வருகின்றன. மக்களுக்கு மேலும் பயன் கிடைக்கும் வகையில் நடைபெற வேண்டும். சமுதாயம் உண்மையில் பயனடைய வேண்டும் என்ற நல்ல எண் ணத்திலே மும்பை சீடர் தொழி லதிபர் திரு. ரவீந்திரநாத் அவர்கள் தலைமையில் அறக் கட்டளையின் சார்பில் மருத்துவ மனையும், குழந்தைகளுக்கு மனவளமும் பெருகி, மன அழுத்தம் நீங்க Counselling முறையும் ஆகஸ்ட் 15ம் தேதி இலவச மருத்துவ முகாமில் 10வது ஆண்டு நிறைவு விழா வைத் தொடங்கி வைத்தோம். அந்த நேரத்தில் மனதிலே இனம் புரியாத மகிழ்ச்சி குடி கொண்டது.

மாடம்பாக்கம் நமது 18 சித்தர் சக்திபீடத்தின் மேலும் ஒரு மைல் கல்லாக இந்த விழா அமைந்தது. எல்லாம் ஸத்குரு வின் அருள்.

மருத்துவக் குழுவின் தலைவர் திரு. நாராயணன், இது அமைய மூலக்காரணமாக இருந்த அமரர் ராம்குமார், அவரது மனைவி திருமதி பிரேமா ராம்குமார் மற்றும் எங்களோடு இணைந்து செயல்பட்ட ஹிந்து மிஷின் மருத்துவமனை இயக்கு னர்கள், மருத்துவர்கள், செவிலி யர்கள், உதவியாளர்கள், ஆலய சிப்பந்திகள் அனைவருக்கும் சித்தர்களின் ஆசிகளை தெரி வித்துக் கொள்கிறேன்.

அவர்கள் குடும்பம் செழிக் கட்டும்.

தர்மம் வளரட்டும், கர்மம் தொலையட்டும்.

தரணி மகிழட்டும்.

**குருஜி சர்மா அவர்கள்**

## சமுதாய விழிப்புணர்ச்சி

அன்பார்ந்த வாசகர்களே!

காலச் சக்கரம் வேகமாகச் சுழன்று கொண்டிருக்கிறது. நன்மையும் தீமையும் மாறி மாறி வருகிறது. நாம் அதில் உழன்று, உருண்டு, திணறி வெளியில் வரமுடியாமல் தவிக்கிறோம். அதனால் உடலும், உள்ளமும் சோர்ந்து விடுகின்றன. மன உறுதி இருந்தால் மட்டும் போதுமா? அதை செயல்படுத்து வதற்கு உடல்நலம் வேண்டுமே. நம் வீட்டில் வாழும் பெரியவர் கள் எல்லோரும் தங்கள் காலத் தில் நோய் நொடி இல்லாமல் வாழ்ந்தோம் என்று மார் தட்டிக் கொள்கின்றனர். இதற்கெல்லாம் யார் காரணம்? என்ன காரணம்? என்று நம்மில் யாராவது ஒருவர் சொல்லமுடியுமா?

நம் சுற்றுப்புறச் சூழலைக் காரணம் காட்டுவதா? அல்லது சத்துக் குறைந்த உணவைச் சாப்பிடுவதால் உண்டான பல ஹீனத்தைச் சொல்லுவதா? எதைச் சொல்லுவது?

நாம் எல்லோரும் வாகனங் களை வைத்துக்கொண்டிருக் கிறோம் என்று பெருமைபட்டுக் கொள்கிறோமே அதை ஓட்டும் போது உண்டாகும் நச்சுக் காற்றைத் தானே நாம் சுவாசிக் கிறோம். ஜனநெருசலில் ஒருத் தருக்கு வந்த நோய் மற்றொரு வருக்குத் தொற்றிக் கொள் கிறதே.

தொற்றுநோய் என்றவுடன் நம் நினைவிற்கு வருவது பன்றிக் காய்ச்சலும், ஸ்வைன் (Swine Flu) தான். பெரியவர்கள் முதல் சிறியவர்கள் வரை அனை வரையும் இந்நோய் தாக்கி அதனால் இறந்தபோனவர்கள் எத்தனை பேர். நினைத்தாலே நம் மனது கலங்குகிறது. நம் அனைவருக்கும் சமுதாய விழிப் புணர்ச்சி வரவேண்டும். நம் சுற்றுப்புறச் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இதை எல்லாவற்றையும்மீறி நம்மை நோய் தாக்கினால் என்ன செய்வது என்று யோசிக்கிறீர் களா? அன்பர் களே! கவலைப் படாதீர்கள். அதற்கும் ஒரு எளிய வழி இருக்கின்றது.

''வரும் முன் காப்போம்'' என்பதற்கிணங்க மாடம்பாக்கம் பதினெண்சித்தர் சக்திபீடத்தில் நவக்கிரகங்களைப் பிரதிபலிக்கும் சித்தர்களை வணங்கினாலே போதுமே! எல்லா நோய்களும் பஞ்சாகப் பறந்து போகுமே. அதுமட்டுமின்றி, குருஜி கூறியபடி துர்க்கையைப் பிரதிபலிக்கும் ஸ்ரீ ராஜகாளி அம்மனை ஞாயிறு தோறும் குங்கும அர்ச்சனை செய்து நெய் தீபம் ஏற்றினாலே போதும். எந்த சித்தர்கள் எந்த கிரகங்களைப் பிரதிபலிக்கிறார் கள் என்பதை அறிந்து கொள்ள அறநிலையத்தினர் வெளியிட் டுள்ள சித்தர்களின் பூஜைமுறைகள் புத்தகத்தினைப் பார்த்து பலன் அடையுங்கள். ஜனவரி மாதத் தில் வரும் ஆராதனை விழாவில் நடைபெறும் ஹோமத்தில் பங் கேற்று தூய்மையான ஆன்மீகக் காற்றை சுவாசியுங்கள்.

**- ஆசிரியர், அருணா நாகராஜன்**

**சேஷ ஒளி அன்பர்களுக்கு எங்களது தீபாவளி நல்வாழ்த்துக்கள்**

## குருஜி பதிலளிக்கிறார்



வாசக அன்பர்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு

சேஷ ஒளியின் மூலம் நட்சத்திரத்தைக் கூறி ஒரு வரியில் கேள்விக்கு பதில் பெறலாம்.



முகவரி: ப.எண். 21/3, பு.எண். 43, அலமேலு மங்காபுரம், மயிலாப்பூர், சென்னை - 600 004. போன் : 044-24938734, 24953793

# பரவசம் தந்த அனுபவங்கள்

*''கருணாசாகரம் சாந்தம் அருணாசலவாசினம்*
*ஸ்ரீ சேஷாத்ரி குரும்வந்தே ப்ரம்மீ பூதம் தபோநிதம்'*

மதிப்பிற்கும் வணக்கத்திற்கும் உரிய சேஷ பக்தர்களே!

சென்ற இதழுக்கு முன் இதழில் எனக்கு விபத்து நடந்ததைப்பற்றி விவரமாக எழுதியிருந்தேன். குருநாதரின் கருணையால் அவரது திருக்கரங்களால் காப்பாற்றப்பட்ட நான் அதன்பிறகு எதையும் பொருட்படுத்தாமல் பழனி பாதயாத்திரையைத் தொடர ஆரம்பித்தேன். அடுத்த தங்கும் இடம் ரெட்டியார் சத்திரம் அரசு நந்த வனம். ஒன்றரை கிலோ மீட்டர் தூரம் உள்ள அந்த இடத்தை நோக்கி நடக்கத் தொடங்கினோம். என்ன ஆச்சர்யம்! என் தலைக்கு மேலே ஒரு பஞ்சவர்ணக்கிளி குரல் கொடுத்தபடியே வந்து கொண்டு இருந்தது. சரியாக அந்த நந்தவனத்திற்குள் நாங்கள் நுழையும் போது என் முகத்திற்கு எதிராக வந்து என் முகத்தை பறந்தபடியே உற்றுப் பார்த்து பின் கத்தியபடி பறந்து சென்றுவிட்டது. அந்தக் கிளி ஒன்றரை கிலோ மீட்டர் என்னைத் தொடர்ந்து பறந்து வந்ததன் மர்மம் என்ன? எதனால் அப்படி? என் முகத்தின் முன்னால் பறந்து உற்றுநோக்க வேண்டிய அவசியம் என்ன? புரியாமல் என் மனம் சிந்தித்தது. புரியாததைப் புரிய வைக்கும் பூலோக தெய்வமல்லவா குருநாதர். என் நண்பர் போட்டோ மூலம் அதை எனக்கு உணர வைத்தார். என் நண்பர் என்னிடம் கீழ்க்கண்டவாறு என்னிடம் கூறினார். அடிபட்ட நீங்கள் சரியாக நடந்து செல்கிறீர்களா? வேறு ஏதாவது பிரச்சனை உள்ளதா என்பதை அறியவே கிளி ரூபமாக உங்கள் தலைக்கு மேல் குருநாதர் பறந்து வந்து கவனித்து விட்டு பின் உங்களுக்கு ஒரு பிரச்சனையுமில்லை என்பதை உங்கள் முகத்தைப் பார்த்து உறுதி செய்துவிட்டு பறந்து சென்றிருக்கிறார் என்றார். மனித மனம் ''இக பொருளை'' நினைத்தால் அது தொடர்பான ஒவ்வொரு ஆசையும் ஒன்றன் பின் ஒன்றாக வந்துகொண்டேயிருக்கும். ஆனால் அந்த மனம் ''இறையருளை'' நினைத்தால் பக்தியில் கண்ணீர்தானே வெள்ளமாக பெருக்கெடுக்கும். அந்த நிலையில் தான் நானும் இருந்தேன்.

சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் அருள் வெள்ளம் அண்டங்கள் தாண்டியும் பொழியக் கூடியது. அவர் அருள்மழையில் நனைந்தபடியே மீண்டும் எங்கள் பயணத்தைத் தொடர்ந்தோம். அடுத்த இதழில் மீண்டும் உங்களை சந்திக்கிறேன்.

**- மருதபரணி**

# மகானிற்கு ஒரு மடல்



மும்பையில் வசிக்கும் திரு. சேஷாத்ரி அவர்களின் சகோதரி திருமதி மீனாட்சி நாராயணன் மகானிற்கு ஒரு மடல் மூலமாக தன் அனுபவத்தை எழுதுகிறார்.

''6-5-2009 அன்று நாங்கள் பதினெண் சித்தர் சக்தி பீடத்தை தரிசித்தோம். மகானின் கருணையினால்தான் நான் மும்பையிலிருந்து சென்னை வந்து மகானையும், பதினெட்டு சித்தர்களையும், ஸ்ரீ சக்ர மகாமேருவையும் தரிசனம் செய்தேன். மகான்களின் கடாட்சம் இருந்தால் இவ்வுலகில் எதுவேண்டுமானாலும் சாத்தியமாகலாம்.

ஒரு சமயம், என் தாயார் தன் முதல் மகன் வீட்டிலிருக்கும்பொழுது, தலை சுற்றி கீழே விழுந்து விட்டாள். மயக்க நிலையிலேயே பக்கத்து வீட்டில் இருப்பவர்கள் மருத்துவ மனையில் சேர்த்தார்கள். தொடையில் 3 எலும்பு முறிவு ஏற்பட்டு இருந்ததால் ஆபரேஷன்தான் செய்யவேண்டும் என்று மருத்துவர் சொல்லி விட்டார். இந்த வயதில் தாங்குவாளோ என்று பயம் இருந்தபோதிலும், அவளுக்கு அந்த வலியிலிருந்து நிவாரணம் கிடைக்க வேண்டும் என்று வேண்டிகொண்டோம். மகானின் அருளால் எல்லாம் நல்லபடியாக முடிந்தது. டாக்டர்களே ஆச்சரியம் அடையும் வகையில் அவர்களுக்கு கொஞ்சம் கொஞ்சமாக நினைவு திரும்பி எங்களிடம் நன்றாகப் பேசினார்கள். தற்சமயம் சென்னை பொது மருத்துவ மனையில்தான் இருக்கிறார். இருந்தாலும் தன் கைகளினால், தானே சாப்பிடும் அளவிற்கு தேறியிருக்கிறார்கள். மகானின் கருணையினால் நன்றாக நடப்பாள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது''

**- மீனாட்சி நாராயணன்**

# சக்தி பீடத்தில் முக்கிய தினங்கள்

**அக். - டிசம்பர் 2009**

**அக்டோபர்**

3 பௌர்ணமி
17 தீபாவளி ஹஸ்தம்
17 அமாவாசை
23 கந்த சஷ்டி
27 ராகு, கேது பெயர்ச்சி
(ராகு - மகர ராசியிலிருந்து தனுர் ராசிக்குச் செல்கிறார்)
(கேது - கடக ராசியிலிருந்து மிதுன ராசிக்குச் செல்கிறார்)
(ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, விருச்சிகம், தனுசு, மகரம், மீனம் மற்றும் எல்லா ராசிக்காரர்களும் பரிகாரம் செய்து கொள்ளலாம்)

**நவம்பர்**

2 பௌர்ணமி
13 ஹஸ்தம்
16 அமாவாசை

**டிசம்பர்**

1 கார்த்திகை தீபம்
10 பௌர்ணமி ஹஸ்தம்
15 குருப்பெயர்ச்சி
(குரு மகரத்திலிருந்து கும்பத்திற்குச் செல்கிறார்)
(ரிஷபம், கடகம், கன்னி, விருச்சிகம், தனுசு, கும்பம், மீன ராசிக்காரர்கள் பரிகாரம் செய்து கொள்ளலாம்)
16 அமாவாசை, ஹனுமத் ஜெயந்தி
28 வைகுண்ட ஏகாதசி

மார்கழி மாதம் கோயில் திறந்திருக்கும் நேரம் -காலை 4.30
உஷத் கால பூஜை - 5.30
மூடும் நேரம் - 11.30 மணி

**ஸ்ரீ சேஷ ஒளி**
சந்தாதாரராகி ஸத்குருவின் திருவருள் பெறுங்கள்
வருட சந்தா ரூ. 101/-

# ஆன்மீகப் பயணக் கட்டுரை

'அரிது, அரிது மானிடராய் பிறப்பது அரிது' என்று ஔவைப் பிராட்டியார் கூறுப்படி, ஒவ்வொரு வரும் ஏதோ பிறக்கிறோம், வளர்கிறோம் என்றில்லாமல், ஏதேனும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் ஒவ்வொருவரிடமும் இருக்கிறது. அதைப் பயன்படுத்தி மேலே வருவது அவரவர்களுடைய சாமார்த்தியத்தில் தான் உள்ளது. பயணக்கட்டுரை என்னால் எழுத முடியுமா என யோசித்ததில் உன்னால் முடியும் என ஆசிரியர் உற்சாகப் படுத்தியதில், கண்ணால் பார்த்ததை யும், குரு அருளால் எனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும், உங்களிடம் பகிர்ந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். எல்லோருக்கும் புனிதப் பயணம் என்பது கிடைக்காது. அந்தத் தருணம் வர வாய்ப்பு வந்தால் அதை பயன்படுத்திக் கொள்ளவேண்டும். புனிதஸ்தலம் என்றால் காசி, ராமேஸ்வரம் என்றுதான் நினைத்துக் கொண்டிருந்தேன். பத்ரிநாத், கேதார் நாத் ஆகிய புனித ஸ்தலத்தை எங்கள் அறநிலைய புரவலர் ஸ்ரீமதி லலிதா அவர்களின் மூலம் அறிந்து கொண்டேன். டெல்லியில் வசிக்கும் திருமதி மாலதி (லலிதா மாமியின் அக்கா பெண்) தொலைபேசியின் மூலம், ஆன்மீகப் பயணம் ஏற்பாடு செய் வதாகவும் நீங்கள் செல்கிறீர்களா எனக் கேட்டவுடன், நான் மாமாவைக் கேட்டுச் சொல்வதாகச் சொல்லி விட்டேன். என் கணவரிடம் இதைப் பற்றிச் சொன்னவுடன் ஆஹா போய் வா என்று சொன்னவுடன் எனக்கு ஒரு நிமிடம் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. வசிஷ்டர் வாயால் சொல்லியாகிவிட்டது என நினைத்துக் கொண்டிருக்கும் போது டாக்டரைப் பார்த்துவிட்டு முடிவு செய் என்றவுடன் கடவுளே குருநாதா எனப் பிரார்த்தனை செய்துகொண்டு படுத்தேன். எப்பொழுது தூங்கினேன் என்று எனக்கு தெரியாது. காக்கை, குருவியின் ஓசையில் கண் விழித்தேன் அன்று மாலை டாக்டரை சென்று பார்த்ததில் உடம்பு நார்மலாக இருப்ப தாகவும் சென்று வரலாம் என்றும் சொன்னார். ஆனால் ஒவ்வொரு மாதமும் செக் அப் செய்யுமாறும் சொன்னார். 3 மாதம் முன்பே டிக்கெட் முன்பதிவு செய்ய வேண்டும். அறநிலைய புரவலர் திருமதி லலிதா அவர்களுக்கு தொலை பேசியில் டிக்கெட் வாங்கி விடுமாறு சொல்லி விட்டேன். காலையில் கவுண்டர் திறந்தவுடன் அவர்களுக்கு கிடைத்தது 3வது கோச். எனக்கு மாலையில் வாங்கியதால் 5வது கோச் கிடைத்தது. எந்த கோச் ஆக இருந்தால் என்ன? இனி அடுத்தது என்ன என்று யோசனை செய்ததில் (Internet-Google) குகூல் வலைதளத்தில் நாடியதில் அதில் நிறைய தகவல்களை சேகரிக்க முடிந்தது. அதில் முதலில் கடைபிடிக்க வேண்டியது, பிராணாயாமம் (மூச்சும், பயிற்சி)மும், நடை பயிற்சி குறைந்தது 2 கிலோ மீட்டர் நடக்க வேண்டும் என்றும் இருந்தது. அதன்படி செய்ய லாம் என நடைப் பயிற்சியில் ஈடுபட்ட போது அன்று நடந்தது என்ன? தொடர்ந்து நடைப் பயிற்சி செய்ய முடிந்ததா?

ஆன்மீகப் பயணம் தொடரும்...

**- திருமதி ராதா சர்மா**

## குருஜியிடம் ஜாதகம் பார்த்து பலனடைந்த பெங்களூரைச் சார்ந்த ஒரு சேஷ பக்தையின் அனுபவம்

என் மகன் பெங்களூரில் Engineering படித்துக் கொண்டிருக்கிறான். அவன் Stream change US முயற்சி பண்ணிக் கொண்டிருந்தான். Telecommunicationலிருந்து Computer Science try பண்ணிக்கொண்டிருந்தான். அதற்கு donation 1.5 இலட்சம் கேட்டார்கள். என் கணவர் காசோலை கொடுத்துவிட்டு வந்தார். அவன் topper ஆக வந்த போதிலும் இவ்வளவு தொகை கொடுக்கவேண்டும் என்கிறார்களே என மிகவும் வேதனையாக இருந்தது. சுவாமிகளிடம் வேண்டிக்கொண்டேன். இரண்டு நாட்களில் Cheque bounce ஆகி பணமாகக் கொண்டு வரும்படி தொலைபேசி மூலம் தெரிவித்தார்கள். என் கணவர் பணமாக எடுத்துக்கொண்டு கல்லூரி உரிமையாளரிடம் பேசி அவன் topper ஆக வந்திருப்பதையும் குறிப்பிட்டார். பிறகு ரூபாய் 25,000 கொடுத்தால் போதும் என்று கூறினார்கள். ஸ்வாமிகளின் அருளினால்தான் இது நடந்தது என்பதை நான் மிகத் தீர்மானமாக நம்புகிறேன்.

எனவே ஸ்வாமிகளின் திருவடியில் நம் பாரத்தை ஒப்படைத்து சரணடைந்துவிட்டால் எல்லாம் நன்மையாகவே முடியும் என்பது சத்தியம்.

**- ராதா,** பெங்களூர்.

## சமத்துவம் வளர்க்கும் பதினெண் சித்தர் சக்தி பீடம்

*சித்தர்கள் ஜாதி மதங்களுக்கு அப்பாற்பட்டவர்கள். நம் மாடம்பாக்கம் பதினெண் சித்தர் சக்தி பீடம் ஜாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி அனைவரையும் அரவணைக்கிறது, வரவேற்கிறது!*

# ராசி பலன்கள்

## அக். - டிசம்பர் 2009

## குருஜி கே.வி.எல்.என். சர்மா



### மேஷம்

*(அசுவினி, பரணி, கார்த்திகை முதல் பாதம்)*

#### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். எடுத்த காரியங்களில் சற்று தாமதம் ஏற்படும். நிதானமாக செயல்பட வேண்டும். அவசர முடிவுகள் எடுக்கக் கூடாது. மனதில் வீண் குழப்பங்கள் குடிகொள்ளும். ஆகையால் முடிவு எடுப்பதைத் தள்ளிப் போடுவது நல்லது. பணியாளர்களுக்கு வழக்கம் போல் பலன்கள் நடைபெறும். வியாபாரிகள் ஓரளவுதான் லாபம் அடைவார்கள். கடல் வாணிபம், ஏற்றுமதி, இறக்குமதி வாணிபத்தில் நஷ்டம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். தொழில் அதிபர்களும் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். பெண்களுக்கு சுமாரான பலன்களே நடைபெறும். மாணவர்கள் கவனத்துடன் படிக்க வேண்டும். இருந்தாலும் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்களுக்கு ஆதாயம் ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு மறைமுகத் தொல்லை ஏற்படும். எச்சரிக்கை! விவசாயிகள் ஓரளவுதான் லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

***அதிர்ஷ்ட எண் - 5,6, அனுகூல திசை - வடக்கு, வடகிழக்கு, கிழமை - புதன், வெள்ளி, நிறம் - சாம்பல், பச்சை, வழிபட வேண்டிய கடவுள் - ஸ்ரீதட்சிணாமூர்த்தி, வழிபட வேண்டிய சித்தர்கள் - ஸ்ரீகாக புஜண்டர் சித்தர், ஸ்ரீஅகப்பேய் சித்தர், கிழமை - வியாழன். சந்தி ராஷ்டம தினம் - 20ஆம் தேதி முதல் 22ம் தேதி வரை.***

#### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேது பகவானில் சஞ்சரிக்கிறார். ஆகையால் சொத்துக்கள் விஷயத்தில் எச்சரிக்கை தேவை. புதிய வீடு, மனை வாங்கும் முயற்சி மேற்கொள்ள வேண்டாம். சகோதர, சகோதரிகளால் பரஸ்பரம் மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உண்டு. ஆகையால் உறவுகளை பலப்படுத்திக் கொள்ள வேண்டும். புதிய முயற்சிகளில் ஈடுபடுவதை இந்த மாதமும் தள்ளிப் போடுவது நல்லது.

பணியாளர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். பரிகாரம் செய்து கொள்வது நல்லது. வியாபாரிகளுக்கு சாதாரண பலன்களே நடைபெறும். தொழில் அதிபர்கள் சுமாரான லாபம் அடைவார்கள். பெண்களுக்கு குடும்பத்தில் கணவன், மனைவியிடையே உறவில் பிரச்சனைகள் ஏற்பட்டு விலகும். நிதானத்துடனும், கவனத்துடனும் செயல்பட வேண்டும். பேச்சில் கவனம் தேவை. அவசர முடிவுகள் எடுக்கவேண்டாம். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள் என்றாலும், பொறியியல் கல்வித்துறையில் படிப்பவர்களுக்கு கவனம் தேவை. கலைஞர்களுக்கு சாதாரண பலன்களே நடைபெறும். சில அன்பர்களுக்கு பணம் நஷ்டம் ஏற்பட வாய்ப்பு உண்டு. அரசியல்வாதிகள் எதிரிகளின் தொல்லைக்கு ஆளாவார்கள். ஆகையால் கவனத்துடன் செயல்பட வேண்டும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் நஷ்டம் தெரிகிறது. ஆகையால் அதிக முதலீடு செய்ய வேண்டாம். விவசாயிகளுக்கு சாதாரண பலன்களே நடைபெறும். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும். எதிலும் எச்சரிக்கையுடன் செயல்பட்டால் நஷ்டத்தைத் தவிர்க்கலாம்.

***அதிர்ஷ்ட எண் - 5, அனுகூல திசை - தென்மேற்கு, நிறம் - பச்சை, கிழமை - புதன் வழிபட வேண்டிய கடவுள் - சூரிய பகவான், ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள்-ஸ்ரீ காக புஜண்டர் சித்தர், ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், கிழமை - ஞாயிற்றுக்கிழமை. சந்திராஷ்டம தினம் - 16 ஆம் தேதி முதல் 18ம் தேதி வரை,***

#### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் நீச்சமடைந்து சஞ்சரிப்பதால் எதிலும் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. அவசர முடிவுகள் வீடு, நிலம், மனை வாங்கும் விஷயத்தில் எடுக்க வேண்டாம். கணவன் மனைவி உறவில் முன்னேற்றம் ஏற்படும். திருப்தி ஏற்படும். திருமணம் ஆகாதவர்களுக்கு முயற்சி மேற்கொண்டால் இரண்டு மாதத்தில் திருமணம் நடைபெறும். காதல் கைகூடும். பணியாளர்களுக்கு வழக்கம் போல் பலன்கள் நடைபெறும். முன்கோபப்படக் கூடாது. புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவுதான் லாபம் அடைவார்கள். இருப்பினும் வியாபாரத்தில் போட்டி, சச்சரவு குறையும். பெண்கள் ஆதாயம் அடைவார்கள். மனமகிழ்ச்சி அடைவார்கள். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்கள் நல்ல பலன் அடைவார்கள். வெளிநாட்டுப் பிரயாணத்தின் மூலம் அனுகூலம் உண்டு. அரசியல்வாதிகள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். மற்ற கட்சிகளோடு விதண்டாவாதத்தில் ஈடுபடக் கூடாது. விவசாயிகளுக்கு சாதாரண பலன்களே நடைபெறும். பொதுவாக இந்த மாதத்தின் முற்பகுதியில் நல்ல பலனும், பிற்பகுதியில் சுமாரான பலன்களும் நடைபெறும்.

***அதிர்ஷ்ட எண் - 6,7, அனுகூல திசை - தென்கிழக்கு, கிழமை - வியாழன், நிறம் - சாம்பல், பச்சை, வழிபட வேண்டிய சித்தர்கள் - ஸ்ரீகாகபுஜண்டர் சித்தர், ஸ்ரீஅகப்பேய் சித்தர், கிழமை -வியாழன், வழிபடவேண்டிய கடவுள் - முருகப்பெருமான், கிழமை - செவ்வாய். சந்திராஷ்டம தினம் - 14 ஆம் தேதி முதல் 16ம் தேதி வரை,***



### ரிஷபம்

*(கார்த்திகை 2, 3, 4, பாதம் ரோகிணி, மிருகசீரிஷம் 1, 2 பாதம்)*

#### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். மனைவி மூலமாக கணவனுக்கும், கணவன் மூலமாக மனைவிக்கும் அனுகூலம் உண்டு. ஆனால் வீண் வாக்குவாதத்தில் ஈடுபட வேண்டாம். பணியாளர்களுக்கு பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள் ஓரளவு நல்ல லாபம் அடைவார்கள். தொழில் அதிபர்களும் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு நல்ல பலன்கள் ஏற்படும். மனமகிழ்ச்சி ஏற்படும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்கள் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு பேச்சாற்றல் மூலம் பணம் சேரும். விவசாயிகளும் ஆதாயம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் உங்களுக்கு நல்ல மாதமாகவே அமையும். பேச்சில் மட்டும் சற்று கவனம் தேவை.

***அதிர்ஷ்ட எண்கள் - 5,6, கிழமை - புதன், வெள்ளி, அனுகூல திசை - தென்கிழக்கு, நிறம் - பச்சை, சாம்பல், வழிபட வேண்டிய சித்தர்கள் - ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழன். கடவுள் - ஸ்ரீ ராஜகாளி அம்மன், கிழமை - வெள்ளிக்கிழமை. சந்திராஷ்டம தினம் - 22 ஆம் தேதி முதல் 25ம் தேதி வரை,***

#### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் நீச்சமடைந்து சஞ்சரிக்கிறார். ஆகையால் எதிலும் கவனத்துடன் செயல்பட வேண்டும். பெண்களுக்கு உடல் நலத்தில் பாதிப்பு ஏற்படும். கணவன் மனைவி இடையே சிறு சிறு சலனங்கள் ஏற்பட்டு விலகும்.

புதிய வீடு, மனை வாங்கும் முயற்சியில் ஈடுபட வேண்டாம். சொத்துக்கள் விஷயத்தில் எச்சரிக்கை தேவை. பணியாளர்கள் புதிய இடத்திற்கு மாற்ற முயற்சி செய்ய வேண்டாம். வழக்கம் போல் பணிகளை மேற்கொள்வது நல்லது. வியாபாரிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். தொழில் அதிபர்களுக்கு வியாபாரப் போட்டியினால் சரிவு ஏற்படும். எச்சரிக்கை! மாணவர்கள் கவனத்துடன் படிக்க வேண்டும். கலைஞர்களுக்கு பெண்களால் இழப்பு ஏற்படும். ஜாக்கிரதை. அரசியல்வாதிகள் சொத்து தகராறில் ஈடுபட்டு எதிரிகளின் சூழ்ச்சிக்கு ஆளாவார்கள். எச்சரிக்கை! விவசாயிகளுக்கும் சுமாரான பலன்களே நடைபெறும். பொதுவாக இந்த மாதம் உங்களுக்கு சாதாரண பலன்களே நடைபெறும் என்பதால் பரிகாரங்கள் செய்து கொள்வது நல்லது.

***அதிர்ஷ்ட எண் - 5, அனுகூல திசை - தென்மேற்கு, கிழமை - புதன், நிறம் - பச்சை, வழிபடவேண்டிய சித்தர்கள் - ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், கிழமை - ஞாயிறு, வழிபடவேண்டிய கடவுள்-ஸ்ரீ முருகப் பெருமான், செவ்வாய் கிழமை. பொதுவாக நவக்கிரகங்களை பிரார்த்தனை செய்வது இந்த மாதம் நல்ல பலன்களைக் கொடுக்கும். சந்தி ராஷ்டம தினம் - 19 ஆம் தேதி முதல் 21ம் தேதி வரை,***

#### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். ஆகையால் நினைத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். புதிய சொத்துசேர்க்கை கிடைக்கும். ஆனாலும் அவசரப்பட்டு கடன் வாங்காமல் இருப்பது நல்லது. நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. கணவன் மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். சகோதர, சகோதரி வழிகளில் வீண் செலவு ஏற்படும். கவனத்துடன் செயல்பட வேண்டும். பணியாளர்களுக்கு நல்ல பலன்களே நடைபெறும். பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். அரசாங்கம், வங்கி இன்சூரன்ஸில் வேலை பார்ப்பவர்கள் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. இடமாற்றம் ஏற்படும். தொழில் அதிபர்கள், வியாபாரிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். ஆனால் வரித்தொல்லை காரணமாக அரசாங்கத்தினால் பாதிப்பு தெரிகிறது. எச்சரிக்கை! பெண்களுக்கு நல்ல சுபபலன் ஏற்படும். மன மகிழ்ச்சி ஏற்படும். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேற்றம் அடைவார்கள். கலைஞர்கள் வெளிநாட்டுப் பிரயாணம் மூலம் ஆதாயம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு சொத்துச் சேர்க்கையில் பிரச்சனை ஏற்படும். பங்குதாரர்களால் பிரச்சனை ஏற்படும். எச்சரிக்கை! விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் நல்ல பலனும், பிற்பகுதியில் சுமாரான பலனும் நடைபெறும்.

***அதிர்ஷ்ட எண் - 1, 6, கிழமை - ஞாயிற்றுக்கிழமை, வெள்ளிக்கிழமை, அனுகூல திசை - தென்கிழக்கு, கிழக்கு, வழிபட வேண்டிய சித்தர்கள் - ஸ்ரீ மகாபோகர் சித்தர், ஸ்ரீ புலிப்பாணி சித்தர், கிழமை - செவ்வாய்க்கிழமை, வழிபடவேண்டிய கடவுள் - ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, கிழமை - வியாழக்கிழமை, நிறம் - சாம்பல். சந்திராஷ்டம தினம் - 16 ஆம் தேதி முதல் 18ம் தேதி வரை,***



### மிதுனம்

*(மிருகசீரிஷம் 3, 4 பாதம் திருவாதிரை, பூனர்பூசம் 1, 2, 3 பாதம்)*

#### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் சுக்ர பகவானோடு சஞ்சரிக்கிறார். எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும். கணவன் மனைவி உறவு ஓரளவு நல்லமுறையில் இருக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு 2 மாதத்திற்குப் பின் திருமணம் கைகூடும். பொருளாதாரத்தில் எச்சரிக்கை தேவை. பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்யவேண்டாம். பணவிஷயத்தில் கவனம் தேவை. மாணவர்கள் நன்றாகப் படிக்க வேண்டும். முயற்சி செய்யவேண்டும். பணியாளர்களுக்கு வழக்கம் போல் பலன்கள் நடைபெறும். புதிய முயற்சியில் ஈடுபட வேண்டாம். தொழில் அதிபர்கள், வியாபாரிகள், ஓரளவு லாபம் அடைவார்கள். தந்தை மகன் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட இடம் உண்டு. எச்சரிக்கை. பெண்களுக்கு ஆதாய பலன்கள் நடைபெறும். கலைஞர்களுக்கும், சுப பலன்கள் ஏற்படும். அரசியல்வாதிகள் ஆதாயம் அடைவார்கள். விவசாயிகளுக்கும் நல்ல பலன் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் ஓரளவு நல்ல மாதமாகவே அமையும்.

***அதிர்ஷ்ட எண் - 2,5, அனுகூல திசை - வடகிழக்கு, கிழமை - திங்கள், புதன், நிறம் - வெண்மை, பச்சை, வழிபட வேண்டிய சித்தர்கள் - ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழன், வழிபட வேண்டிய கடவுள் - ஸ்ரீ சக்திபீட கணபதி, கிழமை - திங்கட்கிழமை. சந்திராஷ்டம தினம் - 25 ஆம் தேதி முதல் 27ம் தேதி வரை,***

#### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் சூரிய பகவானோடு சஞ்சரிக்கிறார். எங்கும் வெற்றி, எதிலும் வெற்றி என்று வெற்றி வாய்ப்புகள் கைகூடும். ஆனாலும் பிதுர் ராஜ்ஜித சொத்துகளில் குழப்பம் தெரிகிறது. எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். பணியாளர்களுக்கு வேலை செய்யும் இடத்தில் நல்ல பெயர் கிடைக்கும். ஆனால் பெண்களால் தொல்லை ஏற்படும். எச்சரிக்கை! அவசர முடிவுகள் தற்சமயம் எடுக்க வேண்டாம். வியாபாரிகள், தொழில் அதிபர்கள் கடல் வாணிபத்தின் மூலம் லாபம் அடைவார்கள். பெண்களுக்கு சுக போகம், மனமகிழ்ச்சி கிடைக்கும் என்றாலும், இனம்புரியாத வருத்தம் ஏற்படும். மாணவர்கள் கவனமாகப் படிக்கவேண்டும். அரசியல்வாதிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். விவசாயிகளுக்கு ஓரளவு லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் சுமாராகவும், பிற்பகுதியில் நல்ல பலன்களும் கிடைக்கும்.

***அதிர்ஷ்ட எண் - 5, அனுகூல திசை - வடகிழக்கு, நிறம் - பச்சை கிழமை - புதன், வழிபட வேண்டிய சித்தர்கள் - ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், கிழமை - ஞாயிற்றுக்கிழமை, வழிபட வேண்டிய கடவுள்-ஸ்ரீ கிரஹ லக்ஷ்மி படத்தை வைத்து வெள்ளிக்கிழமை தோறும் பூஜை செய்து வருவது பணப் பிரச்சனையைத் தீர்க்கும். சந்தி ராஷ்டம தினம் - 21ஆம் தேதி முதல் 24ம் தேதி வரை,***

#### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்களது ராசிநாதன் ரோகஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். உடலில் உஷ்ண ஆதிக்கத்தினால் தொல்லை ஏற்படும். மருத்துவ செலவுகள் ஏற்படும். உடல் நலத்தில் கவனம் செலுத்த வேண்டும். கணவன் மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். காதல் கைகூடும். அவசரப்பட்டு திருமண முடிவுகள் எடுக்க வேண்டாம். புதிய நிலம் வாங்கும், மனை வாங்கும் முயற்சியில் ஈடுபடவேண்டாம். பணியாளர்கள் வழக்கம் போல் பணிகளை செய்து வருவது நல்லது. வியாபாரம், தொழிலதிபர்களுக்கு எதிர்பாராத நஷ்டம் ஏற்படும் என்பதால், கடனுக்கு வியாபாரம் செய்யவேண்டாம். பெண்களுக்கு ஓரளவு ஆதாயம் கிடைக்கும்.

மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்களுக்கு சிறப்பான பலன்கள் நடைபெறும். புதிய தொடர்பு மூலமாக பணவரத்து ஏற்படும். அரசியல்வாதிகள் சொத்து தகராறில் ஈடுபட்டு பணத்தை இழப்பார்கள். எச்சரிக்கை! விவசாயிகளுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் உங்களுக்கு சுமாரான பலன்களே நடைபெறும்.

***அனுகூல திசை:- தென்கிழக்கு, கிழமை: திங்கள், வெள்ளி, அதிர்ஷ்ட எண்: 1, 6. நிறம்: ரோஸ், சாம்பல், வழிபட***

***வேண்டிய கடவுள் - ஸ்ரீ முருகன், கிழமை - செவ்வாய், வழிபடவேண்டிய சித்தர்கள்: ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழன். சந்திராஷ்டம தினம் - 18 ஆம் தேதி முதல் 21ம் தேதி வரை.***



## கடகம்

***(பூனர்பூசம் 4ம் பாதம், பூசம், ஆயில்யம்)***

### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். மனதில் வீண் குழப்பங்கள் நிலவும். சற்று கவனத்துடன் செயல்பட வேண்டும். ஞாபகமறதி ஏற்பட இடம் உண்டு. அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். கணவன் மனைவி உறவில் அதிருப்தி ஏற்படும். விட்டுக் கொடுத்துப் பழகவேண்டும். காதல் விஷியத்தில் அவசரப்பட வேண்டாம். பணியாளர்களுக்கு வழக்கம்போல் பலன்கள் நடைபெறும். வியாபாரிகள், தொழில் அதிபர்கள் ஓரளவுதான் லாபம் அடைவார்கள். கவனத்துடன் செயல்பட வேண்டும். பெண்களுக்கு வீண் மனச்சலனங்கள் ஏற்படும். நிதானத்தைக் கடைபிடித்து தியானம் செய்வது நல்லது. மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்களுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். பணவரத்து ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு ஓரளவு நல்ல லாபம் கிடைக்கும். விவசாயிகளுக்கும் நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும்.

***அதிர்ஷ்ட எண்: 5,6 அனுகூல திசை: வடகிழக்கு, நிறம்: பச்சை, சாம்பல், கிழமை: புதன், வெள்ளி, வழிபடவேண்டிய கடவுள்: ஸ்ரீ சக்திபீட கணபதி, கிழமை - திங்கட்கிழமை, வழிபடவேண்டிய சித்தர்கள்: ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினம் - 27 ஆம் தேதி முதல் 30ம் தேதி வரை,***

### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்களது ராசிநாதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். புதிய யுக்திகளைக் கையாளுவீர்கள். எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். மனதிற்கு இனிய நிகழ்ச்சிகள் நடைபெறும். கணவன் மனைவி உறவு ஓரளவு திருப்திகரமாக இருக்கும். காதல் கைகூடும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும். புதிய சொத்து, மனை வாங்கும் முயற்சியில் ஈடுபட வேண்டாம். சகோதர வழியில் செலவுகள் ஏற்படும். பணியாளர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பதவி உயர்வு கிடைக்கும். அரசாங்கத்தில் வேலை செய்பவர்கள் எச்சரிக்கையுடன் செயல்படுவது நல்லது. வியாபாரிகள் தொழில் அதிபர்கள் கடல் வாணிபத்தின் மூலம் லாபம் அடைவார்கள். பெண்களுக்கு நல்ல சிறப்பான பலன்கள் ஏற்படும். புதிய தொடர்புகள் ஏற்பட்டு மகிழ்ச்சி ஏற்படும். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்களுக்கு சுமாரான பலன்களே நடைபெறும். பண விஷயத்தில் எச்சரிக்கை தேவை. அரசியல்வாதிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். விவசாயிகளுக்கு ஓரளவு நல்ல பலன்கள் ஏற்படும். பொதுவாக இந்த மாதம் உங்களுக்கு ஓரளவு நல்ல பலன்களே நடைபெறும்.

***அதிர்ஷ்ட எண் - 5, நிறம் - பச்சை, அனுகூல திசை-தென்மேற்கு, கிழமை - புதன்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் - ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், கிழமை - ஞாயிறு; வழிபட வேண்டிய கடவுள் : ஸ்ரீ முருகன், கிழமை - செவ்வாய்க் கிழமை, ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, கிழமை - வியாழன். சந்திராஷ்டம தினம் - 24 ஆம் தேதி முதல் 26ம் தேதி வரை,***

சில அன்பர்களுக்கு வெளிநாட்டுப் பிரயாணம் ஏற்பட வாய்ப்பு உண்டு. அதன் மூலம் ஆதாயம் கிடைக்கும்.

### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். சில அன்பர்களுக்கு புதிய சொத்துசேர்க்கை ஏற்படும். ஓர் இடத்தை விட்டு மற்றொரு இடத்தை வாங்கும் சூழ்நிலை ஏற்படும். கணவன் மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். வியாபாரிகளுக்கு ஓரளவு நல்ல லாபம் கிடைக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும். தொழில் அதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு மனதிற்கு இனிய சம்பவம், மனமகிழ்ச்சி ஏற்படும். மனைவியால் கணவனுக்கும் கணவனால் மனைவிக்கும் ஆதாயம் உண்டு. மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்களுக்கு திடீர் பிரயாணத்தின் மூலம் லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகள் நல்ல லாபம் அடைவார்கள். விவசாயிகளுக்கு ஓரளவு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம், உங்களுக்கு நல்ல மாதமாகவே அமையும்.

***அதிர்ஷ்ட எண் - 5,6, அனுகூல திசை - வடகிழக்கு, நிறம் - பச்சை, சாம்பல், கிழமை - புதன், வெள்ளி, வழி பட வேண்டிய கடவுள் - ஸ்ரீ முருகன், கிழமை - செவ்வாய்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் - ஸ்ரீ பாம்பாட்டி சித்தர், ஸ்ரீ அழுகணிசித்தர், கிழமை - ஞாயிற்றுகிழமை.(ராகுகாலம்) சந்திராஷ்டம தினம் - 21 ஆம் தேதி முதல் 23ம் தேதி வரை,***



## சிம்மம்

***(மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்)***

### அக்டோபர்

உங்கள் ராசிநாதன் 2-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார் பேச்சில் கவனம் தேவை. தகப்பன் மகன் இடையே வீண் வாக்கு வாதம் ஏற்படும். நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. கணவன் மனைவி உறவு நல்லமுறையில் இருக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும். காதல் கைகூடும். பணியாளர்கள் ஓரளவு நல்ல லாபத்தை அடைவார்கள். இடமாற்றம் ஏற்படும். அவசர முடிவுகளை எடுக்க வேண்டாம். நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. எதிரிகளின் சூழ்ச்சிகளால் தொல்லை இருக்கிறது. எச்சரிக்கை! வியாபாரிகள், தொழில் அதிபர்கள் வழக்கம் போல் வியாபாரத்தை நடத்த வேண்டும். விரிவுபடுத்த வேண்டாம். பெண்கள் ஓரளவு நல்ல லாபம் அடைவார்கள். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்களுக்கு சிறப்பான பலன்கள் நடைபெறும். அரசியல்வாதிகள் ஆதாயம் அடைவார்கள். விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதி நல்ல மாதமாகவே அமையும். பேச்சில் மட்டும் கவனம் தேவை.

***அதிர்ஷ்ட எண் - 5,6, அனுகூல திசை - தென்கிழக்கு, நிறம் - பச்சை, சாம்பல், கிழமை - புதன், வெள்ளி, வழி படவேண்டிய கடவுள் - ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, கிழமை - வியாழக் கிழமை, வழிபடவேண்டிய சித்தர்கள் - ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழன். சந்திராஷ்டம தினம் - 2 ஆம் தேதி முதல் 5ம் தேதி வரை, 30 ஆம் தேதி முதல் நவம்பம் 1 ஆம் தேதி வரை.***

### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 3-ம் இடத்தில் நீச்சமடைந்து சஞ்சரிக்கிறார். மனபலம் குறையும். வீண் வாக்குவாதங்கள் ஏற்படும். குடும்பத்தில் மனஅமைதி குறையும். நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். கணவன், மனைவி விட்டுக் கொடுத்துப் பழகுவது நல்லது. பணியாளர்கள் ஓரளவுதான் லாபம் அடைவார்கள். நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. வியாபாரிகள், தொழில் அதிபர்களுக்கு நஷ்டம் தெரிகிறது. எச்சரிக்கையுடன் வியாபாரம் செய்யவேண்டும்.

பெண்களுக்கு சுமாரான பலன்களே நடைபெறும். நகை நட்டுகளில் கவனம் தேவை. மாணவர்கள் கல்வித்துறையில் கவனத்துடன் படித்தால் முன்னேறலாம். அரசியல்வாதிகளுக்கு சொத்துத் தகராறு, சகோதரன் மூலம் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. கவனம் தேவை. விவசாயிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் சாதாரண மாதமாகவே அமையும். எதிலும் எச்சரிக்கையுடன் செயல்பட்டால் நிச்சயம் வெற்றி அடையலாம். பரிகாரம் செய்து கொள்வது நல்லது.

***அதிர்ஷ்ட எண் - 5, அனுகூல திசை - வடகிழக்கு, நிறம் - பச்சை, கிழமை - புதன், வழிபடவேண்டிய கடவுள் - ஸ்ரீ முருகன், கிழமை - செவ்வாய் கிழமை, ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, கிழமை -வியாழக்கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் - ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், கிழமை - வியாழக்கிழமை. சந்திராஷ்டம தினம் - 26 ஆம் தேதி முதல் 28ம் தேதி வரை.***

### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் கேந்திர ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். கணவன், மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். புதிய முயற்சிகள் ஈடுபட்டால் வெற்றி கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பெண்களுக்கு நல்ல மாதமாகவே அமையும். நினைத்த காரியம் நிறைவேறும். ஆடை ஆபரணங்கள் சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்களுக்கு வெளிநாட்டுப் பிரயாணம் கைகொடுக்கும். அரசியல்வாதிகள் சொத்துத் தகராறில் ஈடுபட வேண்டாம். எதிலும் எச்சரிக்கையுடன் செயல்பட்டால் நல்ல லாபம் அடையலாம். விவசாயிகளுக்கு நல்ல பலன்களே நடைபெறும். பொதுவாக உங்களுக்கு இந்த மாதம் சுப பலன்களே நடைபெறும்.

***அதிர்ஷ்ட எண் - 5,6, அனுகூல திசை - தென்மேற்கு, கிழமை - புதன், வெள்ளி, வழிபட வேண்டிய கடவுள் - ஸ்ரீ முருகன், கிழமை - செவ்வாய் கிழமை, வழிபட வேண்டிய சித்தர்கள் - ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழக் கிழமை, நிறம் - பச்சை, சாம்பல், வெண்மை. சந்திராஷ்டம தினம் - 23 ஆம் தேதி முதல் 26ம் தேதி வரை,***



## கன்னி

***(உத்திரம் 2, 3, 4 பாதம், ஹஸ்தம், சித்திரை 1, 2 பாதம்)***

### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் விரய மடைந்து சஞ்சரிக்கிறார். இருந்தாலும் புதிய உத்திகளைக் கையாண்டு வெற்றியடைவீர்கள். நினைத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும். கணவன், மனைவி உறவு நல்லமுறையில் திருப்திகரமாக இருக்கும். ஏழரை சனியின் பாதிப்பு இருப்பதால் எதிலும் நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. பிரயாணத்தின் போது கவனம் தேவை. பணியாளர்களுக்கு நல்ல பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். நினைத்த இடத்தில் இடமாற்றம் ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள், கடன் கொடுக்காமல் இருந்தால் நல்ல இலாபம் அடையலாம். கடல் வாணிபத்தில் ஆதாயம் தரும். பெண்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். மாணவர்கள் நன்றாகப் படிப்பார்கள். கலைஞர்களுக்கு, புதிய தொடர்பின் மூலம் லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகள் ஆதாயம் அடைவார்கள். விவசாயிகளுக்கும் நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் உங்களுக்கு நல்ல மாதமாகவே அமையும்.

***அதிர்ஷ்ட எண் - 9,6, திசை - தெற்கு, நிறம் - சிவப்பு, சாம்பல், கிழமை - செவ்வாய், வெள்ளி, சித்தர்கள் - ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், கிழமை - சனிக்கிழமை, வியாழன், கடவுள் - ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, கிழமை - சனி, வியாழன், சந்திராஷ்டம தினம் - 5 ஆம் தேதி முதல் 7ம் தேதி வரை,***

### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எதிர்பாராத பணவரவு ஏற்படும். குடும்பத்தில் குதூகலம் நிலவும், மனமகிழ்ச்சி ஏற்படும். கணவன், மனைவி உறவு நல்ல முறையில் இருக்கும். பணியாளர்கள் சற்று கவனத்துடன் இருக்க வேண்டும். அவசர முடிவுகள் எடுக்க வேண்டாம். வேலை செய்யுமிடத்தில் எச்சரிக்கை தேவை. தொழிலதிபர்கள் கடல் வாணிபத்தின் மூலம் லாபம் அடைவார்கள். பெண்களுக்கு சற்று சுமாரான பலன்களே நடைபெறும். மாணவர்கள் சற்று கவனத்துடன் படித்தால் முன்னேறலாம். கலைஞர்களுக்கு பண இழப்பு தெரிகிறது. பிரயாணத்தின் போது எச்சரிக்கை தேவை. அரசியல்வாதிகள், சொத்துத் தகராறு, குடும்பத் தகராறில் ஈடுபடக் கூடாது. நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. விவசாயிகளுக்கு சாதாரண பலன்களே நடைபெறும். பொதுவாக உங்களுக்கு இந்த மாதம் சுமாரான பலன்களே நடைபெறும்.

***அதிர்ஷ்ட எண் - 5, திசை - வடகிழக்கு, நிறம் - பச்சை, கிழமை - புதன், சித்தர்கள் - ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், கிழமை - ஞாயிறு, கடவுள் - ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, கிழமை-வியாழன், சூரிய பகவான், ஞாயிறு. சந்திராஷ்டம தினம் - 1 ஆம் தேதி முதல் 3ம் தேதி வரை, 28 ஆம் தேதி முதல் 30ம் தேதி வரை.***

### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். கணவன் மூலம் மனைவிக்கும், மனைவி மூலம் கணவனுக்கும் அதிர்ஷ்டம் ஏற்படும். பணியாளர்களுக்கு தடுமாற்றம் ஏற்படும். ஆகையால் புதிய இடமாற்ற முயற்சியில் ஈடுபட வேண்டாம். நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. ஏழரை சனியின் பாதிப்பு இருப்பதால் எதிலும் கவனம் தேவை. பிரயாணத்தின் போது எச்சரிக்கை தேவை. வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவுதான் லாபம் அடைவார்கள். ரியல் எஸ்டேட் வியாபாரிகள் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும். பெண்களுக்கு சுமாரான பலன்களே நடைபெறும். இருப்பினும் வெளிநாடு செல்லும் வாய்ப்பு ஏற்படும். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்களுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு ஓரளவு நல்ல பலன்கள் நடைபெறும். விவசாயிகளுக்கு சுமாரான பலன்களே நடைபெறும். பொதுவாக இந்த மாதம் உங்களுக்கு சுமாரான மாதமாகவே அமையும். நிதானத்துடன் செயல்பட்டால் வெற்றி அடையலாம். பரிகாரங்கள் தேவை.

***அதிர்ஷ்ட எண் - 5,6, திசை - தென் மேற்கு, கிழமை - புதன், வெள்ளி, நிறம் - பச்சை, சாம்பல், சித்தர்கள் - ஸ்ரீ மகாபோகர் சித்தர், ஸ்ரீ புலிப்பாணி சித்தர், கிழமை - செவ்வாய், கடவுள் - ஸ்ரீ ஆஞ்சநேயர், கிழமை - சனி. சந்திராஷ்டம தினம் - 26 ஆம் தேதி முதல் 28ம் தேதி வரை,***



## துலாம்

***(சித்திரை 3, 4 பாதம், சுவாதி, விசாகம் 1, 2, 3, பாதம்)***

### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன், லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். நெடுநாட்களாக தடைபட்ட காரியம் வெற்றி அடையும். அயல்நாட்டுப் பிரயாணம் கைகூடும். சாமர்த்தியமாகப் பேசி சமாளிப்பார்கள். இருந்தாலும் மனதில் வீண் குழப்பங்கள் வந்து மாறும். மாயைக்கு இடம்கொடுக்க வேண்டாம். பணியாளர்கள் நல்ல லாபம் அடைவார்கள். பதவி உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கும் ஓரளவு நல்ல லாபம் கிடைக்கும். கடல் வாணிபம், ஆதாயம் தரும். தொழிலதிபர்கள் முயற்சி அடைவார்கள். பெண்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். கணவனால், மனைவிக்கும், மனைவியால் கணவனுக்கும், மகிழ்ச்சி ஏற்படும். கலைஞர்கள் நல்ல லாபம் அடைவார்கள். அரசியல்வாதிகளுக்கு சிறப்பான பலன்கள் நடைபெறும். விவசாயிகள் நல்ல லாபம் அடைவார்கள். பொதுவாக உங்களுக்கு இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

***அதிர்ஷ்ட எண் - 5,6, திசை - வடகிழக்கு, நிறம் - பச்சை, சாம்பல், கிழமை - புதன், வெள்ளி, சித்தர்கள் - ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழன், கடவுள்-ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, கிழமை - வியாழன். சந்திராஷ்டம தினம் - 7 ஆம் தேதி முதல் 9ம் தேதி வரை,***

## நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன், நீச்சமடைந்து சஞ்சரிக்கிறார். ஆகையால் சற்று மனக்குழப்பங்கள் ஏற்பட இடம் உண்டு. எதிலும் கவனம் தேவை. அவசரமுடிவுகள் எடுக்க வேண்டாம். எதிலும் நிதானம் தேவை. கணவன், மனைவியிடையே கருத்து வேறுபாடுகள் இருந்து அகலும். புதிய சொத்து சேர்க்கும் முயற்சியில் ஈடுபட வேண்டாம். திருமணம் ஆகாதவர்களுக்கு 2 மாதத்திற்குப் பிறகு திருமணம் கைகூடும். உணர்ச்சிவசப்படக்கூடாது. வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு நல்ல இலாபம் அடைவார்கள். இருந்தாலும், கடன் வாங்கி தொழில் செய்ய வேண்டாம். பெண்களுக்கு சாதாரண பலன்களே நடைபெறும். மாணவர்கள் சற்று கவனத்துடன் படிக்க வேண்டும். கலைஞர்களுக்கு பொருள் இழப்பு தெரிகிறது. எச்சரிக்கை. அரசியல்வாதிகள், சற்று கவனத்துடன் செயல்படவேண்டும். போட்டித் தொல்லைகள் தெரிகிறது. கவனம் தேவை. விவசாயிகளுக்கு சுமாரான லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் உங்களுக்கு சுமாரான பலன்களே நடைபெறும். பரிகாரம் செய்து கொள்ளுதல் வேண்டும்.

***அதிர்ஷ்ட எண் - 5, திசை - வடகிழக்கு, நிறம் - பச்சை, கிழமை - புதன், சித்தர்கள் - ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழன், கடவுள் - ஸ்ரீ சூரிய பகவான், கிழமை - ஞாயிறு. சந்திராஷ்டம தினம் - 3 ஆம் தேதி முதல் 5ம் தேதி வரை,***

## டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 2ம் இடத்தில் சுப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். நினைத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். நீண்ட நாட்களாக தடைபட்ட விஷயங்கள், தடை விலகி அனுகூலமாக மாறும். கணவன், மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். எதிர்பாராத தனசேர்க்கை ஏற்படும். பணியாளர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். முடிந்த அளவு இடமாற்றத்திற்கு முயற்சி செய்ய வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் நல்ல லாபம் அடைவார்கள். கடல் வியாபாரம் கைகொடுக்கும். பெண்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். புதிய ஆபரணச்சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்களுக்கு சிறப்பான பலன்கள் ஏற்படும். அரசியல்வாதிகள் சொத்து தகராறில் ஈடுபட வேண்டாம். சூழ்ச்சி தெரிகிறது. எச்சரிக்கை. விவசாயிகள் நல்ல லாபம் அடைவார்கள். பொதுவாக இந்த மாதம் உங்களுக்கு சிறப்பான மாதமாகவே அமையும்.

***அதிர்ஷ்ட எண் - 5,6, திசை - தென்மேற்கு, கிழமை - புதன், வெள்ளி, நிறம் - பச்சை, சாம்பல், சித்தர்கள் - ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழன், கடவுள் - ஸ்ரீ முருகப் பெருமான், ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, கிழமை- செவ்வாய், வியாழன். சந்திராஷ்டம தினம் - 1 ஆம் தேதி முதல் 3ம் தேதி வரை, 28 ஆம் தேதி முதல் 30ம் தேதி வரை,***



# விருச்சிகம்

*(விசாகம் 4ம் பாதம், அனுஷம்,கேட்டை )*

## அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். பணவிஷயத்தில் எச்சரிக்கை தேவை. பங்குமார்க்கெட்டில் முதலீடு செய்யவேண்டாம். கணவன், மனைவி உறவு சாதாரண முறையில் இருக்கும். விட்டுக்கொடுத்துப் பழகவேண்டும். திருமணத்தடை தெரிகிறது. திருமண முயற்சியை தள்ளிப்போடுவது நல்லது. பணியாளர்களுக்கு மனத்திருப்தி ஏற்படும். இடப்பெயர்ச்சி ஏற்படும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு நல்ல லாபம் அடைவார்கள். ஆனாலும் கடன் வியாபாரம் செய்யாமல் இருப்பது நல்லது. பெண்களுக்கு நல்ல ஆதாயம் கிடைக்கும். மனமகிழ்ச்சி ஏற்படும். பொருட்சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள் என்றாலும், படிப்பில் தடை தெரிகிறது. கவனத்துடன் படிக்க வேண்டும். கலைஞர்களுக்கு ஆதாயம் கிடைக்கும். பணவரத்து ஏற்படும். அரசியல்வாதிகள் ஆதாயம் அடைவார்கள். விவசாயிகளுக்கு ஓரளவு நல்ல பலன்களே நடைபெறும். பொதுவாக உங்களுக்கு இந்த மாதம் சுமாரான பலன்களே நடைபெறும்.

***அதிர்ஷ்ட எண் - 5,6, திசை - தென்கிழக்கு, நிறம் - பச்சை, சாம்பல், கிழமை - புதன், வெள்ளி, சித்தர்கள் - ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழன், கடவுள்-ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, கிழமை - வியாழன். சந்திராஷ்டம தினம் - 9 ஆம் தேதி முதல் 11ம் தேதி வரை.***

## நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பாக்கிய ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். இருந்தாலும் நீச்சமடைந்து உள்ளார். ஆகையால் புதிய சொத்து, சேர்க்கும் முயற்சியில் ஈடுபட வேண்டாம். வீடு வாங்கும் முயற்சியிலும் ஈடுபட வேண்டாம். கணவன், மனைவி உறவு சாதாரண நிலையில்தான் இருக்கும். விட்டுகொடுத்துப் பழக வேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள், ஓரளவுதான் லாபம் அடைவார்கள். கடனில் வியாபாரம் செய்யாமல் இருப்பது நல்லது. பெண்களுக்கு சாதாரண பலன்களே நடைபெறும். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேற்றம் அடைவார்கள். கலைஞர்களுக்கு எதிர்பாராத தொடர்பின்மூலம் லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகள் ஆதாயம் அடைவார்கள். இருந்தாலும் சகோதர, சகோதரிகளால் பிரச்சனை ஏற்படும். எச்சரிக்கை தேவை. விவசாயிகளுக்கு சுமாரன பலன்களே நடைபெறும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதியில் உங்களுக்கு நல்ல பலன்களே நடைபெறும்.

***அதிர்ஷ்ட எண் - 5, திசை - தென்மேற்கு, கிழமை - புதன், நிறம் - பச்சை, சித்தர்கள் - ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழன், கடவுள் - ஸ்ரீ முருகப் பெருமான், கிழமை - செவ்வாய். சந்திராஷ்டம தினம் - 5 ஆம் தேதி முதல் 8ம் தேதி வரை.***

## டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எளிதில் உணர்ச்சி வசப்படுவீர்கள். எச்சரிக்கை. பேச்சில் கவனம் தேவை. விதண்டாவாதம் செய்யக்கூடாது. வாக்குவாதம் செய்யக்கூடாது. கவனமாகச் செயல்பட்டால் வெற்றி அடையலாம். கணவன், மனைவி ஓரளவு நல்ல முறையில் திருப்திகரமாக இருக்கும். பணியாளர்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். சில அன்பர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். பதவி உயர்வு, சம்பள உயர்வு கிடைக்கும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் முன்னேற்றம் அடைவார்கள். கடல் வாணிபம் ஆதாயம் தரும். பெண்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்பட்டு பொருட்சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். இருந்தாலும் சற்று கவனத்துடன் படிக்கவேண்டும். கலைஞர்களுக்கு ஆதாயம் கிடைக்கும். அரசியல்வாதிகள் ஓரளவு லாபம் அடைவார்கள், என்றாலும் சொத்துத் தகராறில் ஈடுபடக்கூடாது. விவசாயிகளுக்கு சுமாரான பலன்களே நடைபெறும். பொதுவாக இந்த மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்களே நடைபெறும்.

***அதிர்ஷ்ட எண் - 5, 6, திசை - வடகிழக்கு, நிறம் - பச்சை, சாம்பல், கிழமை - புதன், வெள்ளி, சித்தர்கள் - ஸ்ரீ காக புஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழன், கடவுள்-ஸ்ரீ முருகப்பெருமான், கிழமை - செவ்வாய். சந்திராஷ்டம தினம் - 3 ஆம் தேதி முதல் 5ம் தேதி வரை, 30 ஆம் தேதி முதல் ஜனவரி 1ம் தேதி வரை.***



# தனுசு

*(மூலம், பூராடம், உத்திராடம் 1ம் பாதம் )*

## அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் நீச்சமடைந்து, சஞ்சரிக்கிறார். பங்குமார்க்கெட்டில் முதலீடு செய்யவேண்டாம். பொருளாதார விஷயத்தில் எச்சரிக்கை தேவை. கணவன், மனைவி இடையே உறவு சுமாராக இருக்கும். விட்டுக்கொடுத்துப் பழகவேண்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும். வியாபாரிகள் ஓரளவு நல்ல லாபம் அடைவார்கள். தொழிலதிபர்களுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பணியாளர்களுக்கு இடமாற்றம், மனமகிழ்ச்சி ஏற்படும். சம்பள உயர்வு கிடைக்கும். பெண்கள் மனமகிழ்ச்சி அடைவார்கள். ஆபரணச்சேர்க்கை ஏற்படும். மாணவர்கள், கல்வித்துறையில் முன்னேறுவார்கள். தந்தை, மகன் விஷயத்தில் எச்சரிக்கை தேவை. கலைஞர்களுக்கு ஓரளவு நல்ல லாபம் கிடைக்கும். அரசியல்வாதிகள் ஆதாயம் அடைவார்கள். விவசாயிகளுக்கு ஓரளவு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

***அதிர்ஷ்ட எண் - 5,6, திசை - வடகிழக்கு, கிழமை - புதன், வெள்ளி, நிறம் - பச்சை, சாம்பல், சித்தர்கள் - ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழன், கடவுள் - ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, கிழமை - வியாழன். சந்திராஷ்டம தினம் - 11 ஆம் தேதி முதல் 13ம் தேதி வரை.***

## நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் நீச்சமடைந்துதான் சஞ்சரிக்கிறார். ஆகையால் பொருளாதார விஷயத்தில் எச்சரிக்கை தேவை. இந்த மாதம் கிரகங்கள் உங்களுக்கு அனுகூலமாக இல்லை. ஆகையால் எதிலும் எச்சரிக்கை தேவை. நிதானம் தேவை. பணியாளர்கள் புதிய முயற்சியில் ஈடுபடவேண்டாம். பெண்களால் தொல்லை தெரிகிறது. எச்சரிக்கை தேவை. வியாபாரிகள், கடன் வியாபாரம் செய்யவேண்டாம். ஓரளவுதான் லாபம் கிடைக்கும். தொழிலதிபர்களுக்கு கடல் வாணிபம் கை கொடுக்கும். பெண்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். இருந்தாலும் மனக்கசப்பு ஏற்பட்டு விலகும். மாணவர்கள் கல்வித்துறையில் கவனத்துடன் படித்தால் முன்னேறலாம். கலைஞர்களுக்கு சுமாரான பலன்களே நடைபெறும். அரசியல்வாதிகள் ஓரளவு ஆதாயம் அடைவார்கள். கிரிமினல் வழக்குகளில் ஈடுபட வேண்டாம். விவசாயிகளுக்கு சாதாரண பலன்களே நடைபெறும். பொதுவாக இந்த மாதம் உங்களுக்கு சுமாரான பலன்களே நடைபெறும். பரிகாரங்கள் செய்து கொள்வது நல்லது.

***அதிர்ஷ்ட எண். 5, திசை - வடகிழக்கு, கிழமை - புதன், நிறம் - பச்சை, சித்தர்கள் - ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், கிழமை - வெள்ளி, கடவுள் - ஸ்ரீ முருகப் பெருமான், ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, கிழமை - செவ்வாய், வியாழன். சந்திராஷ்டம தினம் - 8 ஆம் தேதி முதல் 10ம் தேதி வரை,***

## டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் 2ம் இடத்தில் நீச்சமடைந்து சஞ்சரிக்கிறார். வீண் மனக்குழப்பங்கள் ஏற்படும். கற்பனைகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம். கணவன், மனைவி உறவில் பிரச்சனை தெரிகிறது. விட்டுக்கொடுத்துப் பழகுதல் வேண்டும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் கைகூடும். தொழிலதிபர்கள், வியாபாரிகள், நல்ல லாபம் அடைவார்கள். ஏற்றுமதி, இறக்குமதி, கடல் வாணிபம் ஆதாயம் தரும். பெண்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். ஆடை, ஆபரணச்சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேற்றம் அடைவார்கள். கலைஞர்களுக்கு வெளிநாட்டுப் பிரயாணம் ஆதாயம் தரும். அரசியல்வாதிகளுக்கு சொத்துத் தகராறு ஏற்படாமல் இருந்தால் ஆதாயம் தரும். விவசாயிகள், ஓரளவு நல்ல இலாபம் அடைவார்கள். பொதுவாக உங்களுக்கு இந்த மாதம் ஓரளவு நல்ல பலன்களே நடைபெறும்.

***அதிர்ஷ்ட எண் - 5,6, திசை - தென்மேற்கு, கிழமை - புதன், வெள்ளி, நிறம் - பச்சை, சாம்பல், சித்தர்கள் - ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழன், கடவுள் - ஸ்ரீ முருகப்பெருமான், கிழமை - செவ்வாய். சந்திராஷ்டம தினம் - 5 ஆம் தேதி முதல் 7ம் தேதி வரை,***



# மகரம்

*(உத்திராடம் 2, 3, 4 பாதம், திருவோணம், அவிட்டம் 1,2 பாதம்)*

## அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பாக்கியஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். இவ்வளவு நாள் இருந்த அஷ்டமத்து சனி உங்களை விட்டு விலகிவிட்டது. விடுதலை கிடைத்துவிட்டது. நினைத்த காரியம் நிறைவேறும். இனிய பேச்சுகளால் காரியத்தை சாதிப்பீர்கள். ஆனாலும் பொருளாதார விஷயத்தில் சற்று கவனம் தேவை. எச்சரிக்கை தேவை. இருந்தாலும் திடீர் பணவரத்துகள் ஏற்படும். பணியாளர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படும். இடமாற்றம் ஏற்படும். வியாபாரிகள் தொழிலதிபர்கள் லாபம் அடைவார்கள். பெண்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். கணவனால் மனைவிக்கும், மனைவியால் கணவனுக்கும் மகிழ்ச்சி ஏற்படும். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்களுக்கு ஆதாயம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளின் சூழ்ச்சியால் தொல்லைகள் ஏற்படும். கொலை முயற்சியில் ஈடுபடுவார்கள். கவனம் தேவை. விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாகவே இந்த மாதம் உங்களுக்கு நல்ல மாதமாகவே அமையும்.

***அதிர்ஷ்ட எண் - 5, திசை - வடகிழக்கு, நிறம் - பச்சை, கிழமை - புதன், சித்தர்கள் - ஸ்ரீ காகபுஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழன், கடவுள் - ஸ்ரீ சூரிய பகவான், கிழமை - ஞாயிறு. சந்திராஷ்டம தினம் - 13 ஆம் தேதி முதல் 15ம் தேதி வரை,***

## நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் பாக்கியம் அடைந்து சுக்கிரபகவானோடு சஞ்சரிக்கிறார். பெண்களால் மனமகிழ்ச்சி ஏற்படும். சந்தோஷம் ஏற்படும். கணவன் மனைவி உறவு திருப்திகரமாக இருக்கும். பணவரவு ஏற்படும். வியாபாரிகள் தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். பெண்களுக்கு சுமாரான பலன்களே ஏற்படும். மருத்துவ செலவு தெரிகிறது. எச்சரிக்கை. மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்களுக்கு சாதாரண பலன்களே ஏற்படும். அரசியல்வாதிகளுக்கு சகோதர சகோதரிகளால் பிரச்சனை ஏற்பட்டு மனக்குழப்பம் ஏற்படும். விவசாயிகளுக்கு சுமாரான பலன்களே நடைபெறும். பொதுவாக இந்த மாதம் உங்களுக்கு சுமாரான மாதமாகவே அமையும். இம்மாதம் பிரார்த்தனைகளை அதிகப்படுத்துவது நல்ல பலன்களைத் தரும்.

***அதிர்ஷ்ட எண் - 5, திசை - தெற்கு, நிறம் - பச்சை, கிழமை - புதன், சித்தர்கள் - ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், கிழமை - ஞாயிறு, கடவுள் - ஸ்ரீ முருகப்பெருமான், ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, சூரியபகவான். கிழமை-செவ்வாய், வியாழன், ஞாயிறு. சந்திராஷ்டம தினம் - 10 ஆம் தேதி முதல் 12ம் தேதி வரை,***

## டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் நீச்சமடைந்து 2-ம் இடத்தில் சஞ்சரிக்கிறார். இருப்பினும் மற்ற கிரகங்கள் ஓரளவு அனுகூலமாக சஞ்சரிக்கிறார். ஓரளவு நினைத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். ஆனால் பணவிஷயத்தில் எச்சரிக்கை தேவை. யாரை நம்பியும் பணம் கொடுக்க வேண்டாம். பங்கு மார்க்கெட்டில் முதலீடு செய்ய வேண்டாம். கவனம் தேவை. புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். பணியாளர்களுக்கு ஓரளவு எதிர்பார்த்த இடமாற்றம் நடைபெறும். ஆகவே நீங்களாகவே முயற்சி செய்யவேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். கடல் வாணிபம், ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் ஆதாயம் தரும். பெண்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். பொருட்சேர்க்கை ஏற்படும். திடீர் பிரயாணங்களும் ஏற்பட வாய்ப்பு உண்டு. மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்களுக்கு ஆதாயம் கிடைக்கும். அரசியல்வாதிகள் கணவன் மனைவியிடையே பிரச்சனையில் மாட்டிக் கொள்வார்கள். எச்சரிக்கை. விவசாயிகளுக்கு சுமாரான பலன்களே நடைபெறும். பொதுவாக இந்த மாதம் உங்களுக்கு ஓரளவு நல்ல மாதமாகவே அமையும்.

***அதிர்ஷ்ட எண்- 6, திசை - தென் கிழக்கு, கிழமை - வெள்ளி, நிறம் - சாம்பல், சித்தர்கள் - ஸ்ரீ காக புஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழன், கடவுள் - ஸ்ரீ முருகப்பெருமான், கிழமை - செவ்வாய். சந்திராஷ்டம தினம் - 7 ஆம் தேதி முதல் 9ம் தேதி வரை,***

புதன்கிழமை ஸ்ரீ சக்திபீட கணபதியை வழிபட்டால் நல்ல பலன்கள் கிடைக்கும்.



## கும்பம்

*(அவிட்டம் 3, 4 பாதம், சதயம் பூரட்டாதி 1, 2, 3 பாதம்)*

### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் அஷ்டமத்தில் சஞ்சரிக்கிறார். அஷ்டமத்து சனியின் பாதிப்பு இருக்கிறது. ஆகையால் எச்சரிக்கை தேவை. பிரயாணங்களில் கவனம் தேவை. அர்த்தராத்திரி பிரயாணம் மேற்கொள்ளக்கூடாது. எதிலும் நிதானம் தேவை. அவசரப்பட்டு முடிவுகள் எடுக்காமல் இருப்பது நல்லது. பணியாளர்களுக்கு வழக்கம் போல் பலன்கள் நடைபெற்று வரும். சில அன்பர்களுக்கு இடமாற்றம் ஏற்படும். வியாபாரிகளுக்கு ஓரளவுதான் லாபம் கிடைக்கும். கடன் வியாபாரம் செய்யவேண்டாம். கடல் வாணிபம் ஆதாயம் தரும். தொழிலதிபர்கள் ஓரளவு லாபம் அடைவார்கள். கணவன், மனைவியிடையே அவ்வப்பொழுது பிரச்சனை வந்து தீரும். பெண்களுக்கு மனமகிழ்ச்சி ஏற்படும். ஆடை, ஆபரணச்சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்களுக்கு ஓரளவு ஆதாயமும், பணவரத்தும் இருக்கும். அரசியல்வாதிகளுக்கு சொத்துச் சேர்க்கை ஏற்படும். திடீர் திருப்பம் ஏற்படும். விவசாயிகளுக்கு ஓரளவு ஆதாயம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே இருக்கும். அஷ்டமத்து சனிக்கு பரிகாரம் செய்து கொள்ளுதல் வேண்டும்.

***அதிர்ஷ்ட எண் - 5,6, திசை - வட கிழக்கு, நிறம் - பச்சை, சாம்பல், கிழமை - புதன், வெள்ளி, சித்தர்கள் - ஸ்ரீ கருவூரார் சித்தர், ஸ்ரீ கபிலர் சித்தர், கிழமை - சனி, கடவுள் - ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, கிழமை-வியாழன். சந்திராஷ்டம தினம் - 15 ஆம் தேதி முதல் 17ம் தேதி வரை,***

### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் எட்டாம் இடத்தில் நீச்சமடைந்தார். சுக்கிரனோடு சம்பந்தப்பட்டு சஞ்சரிக்கிறார். கணவன், மனைவியிடையே பிரச்சனைகள் ஏற்பட்டு விலகும். ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுத்துப் பழகுவது நல்லது. அவசரமுடிவுகள் எடுக்க வேண்டாம். இருந்தாலும் வாக்குவன்மையால் வெற்றி அடைவீர்கள். பணியாளர்களுக்கு ஓரளவு ஆதாயம் கிடைக்கும். இடமாற்றத்திற்கு முயற்சி செய்யவேண்டாம். நிதானத்தைக் கடைபிடிப்பது நல்லது. தொழிலதிபர்கள், வியாபாரிகள் சுமாரான லாபத்தை அடைவார்கள். பெண்களுக்கு மனசங்கடங்கள் ஏற்பட்டு விலகும். மாணவர்கள் கவனத்துடன் படித்தால் முன்னேறலாம். கலைஞர்களுக்கு சாதாரண பலன்களே நடைபெறும். அரசியல்வாதிகள் சொத்துவழக்கில் மாட்டிக் கொண்டு கோர்ட்டில் ஏறவேண்டிய நிலைமை ஏற்படும். எச்சரிக்கை. விவசாயிகளுக்கு சாதாரண பலன்களே நடைபெறும். பொதுவாக இந்த மாதம் உங்களுக்கு சாதாரண பலன்களே தான் நடைபெறும். பரிகாரங்கள் செய்து கொள்வது நல்லது. சித்தர்களையும் வழிபடுவது நல்லது.

***அதிர்ஷ்ட எண் - 5, திசை - தென் மேற்கு, கிழமை - புதன், நிறம் - பச்சை, சித்தர்கள் - ஸ்ரீ கஞ்சமலை சித்தர், ஸ்ரீ சென்னிமலை சித்தர், கிழமை - வெள்ளிக்கிழமை, கடவுள் - ஸ்ரீ ராஜகாளி அம்மன், ஸ்ரீ முருகப் பெருமான், கிழமை - வெள்ளி, செவ்வாய்.சந்திராஷ்டம தினம் - 12 ஆம் தேதி முதல் 14ம் தேதி வரை,***

ஸ்ரீ கிரஹலக்ஷ்மி படத்தை வைத்து பூஜை செய்வது நல்லது.

### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் மறைவிடத்தில் சஞ்சரிக்கிறார். இருப்பினும் மற்ற கிரகங்கள் சாதகமாக இருப்பதால் சிலருக்கு சொத்துசேர்க்கை ஏற்படும். புதிய மனை வாங்கும் யோகம் ஏற்படும். பிரயாணத்தின் போது எச்சரிக்கை தேவை. பணியாளர்களுக்கு நல்ல இடத்தில் இடமாற்றம், மனமாற்றம் ஏற்படும். வியாபாரிகள் ஓரளவு நல்ல லாபம் அடைவார்கள். தொழிலதிபர்களுக்கு எதிர்பாராத திருப்பங்கள் மூலம் வியாபாரம் பெருகும். பெண்களுக்கு ஆதாயம் உண்டு. மனமகிழ்ச்சி உண்டு. மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேறுவார்கள். கலைஞர்களுக்கு வெளிநாட்டுப் பிரயாணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும். அரசியல்வாதிகளுக்கு எதிரிகளின் சூழ்ச்சி தெரியாது. நேர்முகமாக ஒரு மாதிரி பேசுவார்கள். மறைமுகமாக ஒரு மாதிரி பேசுவார்கள். எச்சரிக்கை தேவை. விவசாயிகளுக்கு சாதாரணப் பலன்களே நடைபெறும். பொதுவாக இந்த மாதம் உங்களுக்கு நல்ல மாதமாகவே அமையும்.

***அதிர்ஷ்ட எண்- 1,5,6, திசை - தென் கிழக்கு, நிறம் - பச்சை, சாம்பல், ரோஸ், கிழமை - ஞாயிறு, புதன், வெள்ளி, சித்தர்கள் - ஸ்ரீ காக புஜண்டர் சித்தர், ஸ்ரீ அகப்பேய் சித்தர், கிழமை - வியாழன், கடவுள் - ஸ்ரீ முருகப்பெருமான், கிழமை - செவ்வாய். சந்திராஷ்டம தினம் - 9 ஆம் தேதி முதல் 11ம் தேதி வரை,***



## மீனம்

*(புரட்டாதி 4ம் பாதம் , உத்திரட்டாதி, ரேவதி)*

### அக்டோபர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் நீச்சமடைந்து சஞ்சரிக்கிறார். பணவிஷயத்தில் எச்சரிக்கை தேவை. பங்குமார்க்கெட்டில் முதலீடுகள் செய்யவேண்டாம். கவனம் தேவை. வங்கிகளில் வேலை செய்பவர்கள் கவனத்துடன் இருக்கவேண்டும். Surity கையெழுத்து போடக்கூடாது. கணவன், மனைவி உறவு சாதாரணமுறையில் இருக்கும். விட்டுக்கொடுத்துப் பழகவேண்டும். வியாபாரிகள், தொழிலதிபர்கள் போட்டியில் மாட்டிக்கொள்வார்கள். கவனத்துடன் செயல்பட்டால் லாபம் அடையலாம். பெண்களுக்கு சுமாரான பலன்களே நடைபெறும். மாணவர்கள் உடல்நிலை பாதிப்பால் படிப்பில் கவனம் செலுத்த முடியாத சூழ்நிலை ஏற்படும். மருத்துவச் செலவு தெரிகிறது. எச்சரிக்கை. கலைஞர்களுக்கு சாதாரண பலன்களே நடைபெறும். அரசியல்வாதிகள் ஓரளவு லாபம் அடைவார்கள். விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும். பொதுவாக இந்த மாதம் முற்பகுதி சுமாராகவும், பிற்பகுதி சாதாரணமாகவும் இருக்கும்.

***அதிர்ஷ்ட எண் - 5,6, திசை - வட கிழக்கு, கிழமை - புதன், வெள்ளி, நிறம் - பச்சை, சாம்பல், சித்தர்கள் - ஸ்ரீ சட்டைமுனி சித்தர், ஸ்ரீ குதம்பை சித்தர், கிழமை - திங்கள், கடவுள் - ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, கிழமை - வியாழன். சந்திராஷ்டம தினம் - 17 ஆம் தேதி முதல் 20ம் தேதி வரை,***

### நவம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் நீச்சமடைந்து இராகுவோடு சஞ்சரித்துக் கொண்டே இருக்கிறார். பொருளாதார விஷயத்தில் எச்சரிக்கை தேவை. புதிய முயற்சியில் ஈடுபடவேண்டாம். புதிய வீடு வாங்கும் முயற்சியிலும் ஈடுபடவேண்டாம். பணியாளர்கள் வழக்கம் போல் சாதாரண பணிகளை செய்து வருதல் நல்லது. புதிய ஈடுபாடுகள் வேண்டாம். வியாபாரிகள், தொழிலதிபர்கள் சாதாரண பலன்களே அடைவார்கள். கடன் வியாபாரம் செய்யாமல் இருப்பது நல்லது. பெண்களுக்கு சாதாரண பலன்களே நடைபெறும். கணவன் மனைவியிடையே பிரச்சனைகள், விரிசல்கள் ஏற்பட்டு விலகும். மாணவர்கள் கல்வித்துறையில் ஓரளவு முன்னேற்றம் அடைவார்கள், கலைஞர்களுக்கு சுமாரான பலன்களே நடைபெறும். அரசியல்வாதிகள் பங்கு போட்டியில் மாட்டிக்கொண்டு சிக்கித் தவிப்பார்கள். பரிகாரம் செய்துகொள்வது நல்லது. விவசாயிகளுக்கு சாதாரண பலன்களே நடைபெறும். பொதுவாக இந்த மாதம் சுமாரான மாதமாகவே அமையும். பரிகாரம் செய்துகொள்வது நல்லது.

***அதிர்ஷ்ட எண் - 5, திசை - வட கிழக்கு, கிழமை - புதன், நிறம் - பச்சை, சித்தர்கள் - ஸ்ரீ பட்டினத்தார் சித்தர், ஸ்ரீ கடுவெளி சித்தர், கிழமை - ஞாயிறு, கடவுள் - ஸ்ரீ முருகப் பெருமான், ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, சூரிய பகவான், கிழமை - செவ்வாய், வியாழன், ஞாயிறு. சந்திராஷ்டம தினம் - 14 ஆம் தேதி முதல் 16ம் தேதி வரை.***

### டிசம்பர்

மாத ஆரம்பத்தில் உங்கள் ராசிநாதன் லாப ஸ்தானத்தில் நீச்சமடைந்து சஞ்சரிக்கிறார். இருந்தாலும் சத்திர மங்கள யோகம் ஏற்பட்டு இருப்பதால், புதிய முயற்சியில் ஈடுபடலாம். புதிய வீடு, மனை வாங்கும் யோகம் உண்டு. இம்மாதம் பிற்பகுதியில் நல்ல பலன்கள் சுபபலன்கள் நடக்கும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும், கைகூடும். காதல் கைகூடும். வியாபாரிகள் ஓரளவு நல்ல லாபம் அடைவார்கள். பங்குமார்க்கெட்டில் அளவோடு முதலீடு செய்வது நல்லது. பணியாளர்களுக்கு நல்ல இடமாற்றம், சம்பள உயர்வு கிடைக்கும். பெண்களுக்கு ஆதாயம் உண்டு. பொருள்சேர்க்கை ஏற்படும். மாணவர்கள் கல்வித்துறையில் முன்னேற்றம் காண்பார்கள். கலைஞர்களுக்கு, வெளிநாட்டுப் பிரயாணத்தின் மூலம் ஆதாயம் கிடைக்கும். திடீர் திருப்பங்கள் ஏற்படும். அரசியல்வாதிகள் சற்று கவனத்துடன் செயல்பட வேண்டும். குழந்தைகளால் மருத்துவச் செலவுகள் ஏற்படும். எச்சரிக்கை. விவசாயிகளுக்கு சாதாரண பலன்களே நடைபெறும். பொதுவாக உங்களுக்கு இந்த மாதம் நல்ல மாதமாகவே அமையும்.

***அதிர்ஷ்ட எண் - 2,5,6, திசை - தென் மேற்கு, வடமேற்கு, நிறம்- வெண்மை, சாம்பல், பச்சை, கிழமை புதன், வெள்ளி, சித்தர்கள் - ஸ்ரீ மகாபோகர் சித்தர், ஸ்ரீ புலிப்பாணி சித்தர், கிழமை - செவ்வாய், கடவுள் - ஸ்ரீ தட்சிணாமூர்த்தி, கிழமை-வியாழன். சந்திராஷ்டம தினம் - 11 ஆம் தேதி முதல் 14ம் தேதி வரை.***

## சந்திர கிரகணம்

**1-1-2010 ஆம் ஆண்டு சந்திர கிரகணம் இரவு 12.21 முதல் ஆரம்பித்து 12.52 வரை முடிகிறது. பரிகாரம் செய்து கொள்ள வேண்டிய நட்சத்திரங்கள் மிருகசீரிஷம், திருவாதிரை, புனர்பூசம், சுவாதி, சதயம்.**

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அன்பார்ந்த சேஷ ஒளி வாசகர்களே, மூன்று மாதத்திற்கு ஒரு முறை பிரசுரமாகும், சேஷ ஒளியை படித்து விட்டீர்களா? உங்களுடைய கருத்துக்களை எங்களுடன் பகிர்ந்துகொள்ளலாம். குறை இருந்தால் திருத்திக் கொள்வோம். நிறை இருந்தால் மகிழ்ச்சி அடைவோம். ஸத்குருவின் அருளை அனுபவித்த அன்பர்கள், தங்களுடைய அனுபவங்களை எங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். பலரும் அறியும்வண்ணம், சேஷ ஒளியிலும் வெளியிடுவோம். தங்கள் பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன், அனுப்புங்கள், அனுப்ப வேண்டிய முகவரி : பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம், மயிலாப்பூர், சென்னை - 600 004. தொலைபேசி : 044-24938734, 24953793


## மன நிம்மதியின்றி தவிக்கும் அன்பர்களே!

உங்களுக்கு வாழ்க்கையில் நிம்மதி பெற வேண்டுமா? சித்தர்களுக்கு சேவை செய்யுங்கள், புண்ணியம் அடையுங்கள், மகிழ்ச்சியைப் பெறுங்கள். அப்படி சேவை செய்ய விரும்பும் அன்பர்கள் குருஜியிடம் நேரடியாகத் தொடர்பு கொண்டு பேசலாம்.

தொலைபேசி எண்.
**24938734**

## ஸ்ரீ குரு கம்ப்யூட்டர் ஜோதிடம்

இவ்விடம் ஜாதகம் தமிழிலும், ஆங்கிலத்திலும் துல்லியமாக கம்ப்யூட்டரில் கணித்துக் கொடுக்கப்படும். அதிர்ஷ்டக் கற்கள் ஆலோசனையும் வழங்கப்படும். ஜாதகப் பொருத்தம், பலன்கள், வாழ்க்கைப் பிரச்சனைகளுக்கு பரிகார விபரங்கள் முதலியவற்றை ஸ்ரீவித்யா உபாசகர், 18 சித்தர் ஆலய பீடாதிபதி, ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகளின் பிரதான சீடர், தெய்வீக ஜோதிடர் குருஜி கே.வி.எல்.என். சர்மா மூலம் தெரிந்து கொள்ளலாம். முன் பதிவு செய்து கொண்டு வரவும்.

**விவரங்களுக்கு**

044-24938734, 24953793 என்ற எண்களில் தொடர்பு கொள்ளவும்.


## 18 சித்தர் சக்தி பீடத்திற்கு பஸ் ரூட்

*தாம்பரம் வேளச்சேரி வழியாக ராஜ கீழ்ப்பாக்கம் வந்து தெற்கே 3 கி.மீ. சென்றால் அருள்மிகு தேனு புரீஸ்வரர் சிவன் கோயிலுக்கு அருகில் ஸ்ரீசக்ர மஹாமேரு, ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவனம் அமைந்துள்ளது.*

*முகவரி : எண். 1, சன்னதி தெரு, மாடம்பாக்கம், சென்னை-73.*

*போன் : 044-22281408,22280407, 29710972.*

பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K
தி.நகரிலிருந்து 5A cut service
இறங்குமிடம் : சிவன் கோயில்


## ஸ்ரீ சேஷ ஒளி விளம்பர கட்டண விபரம்

| | |
|---|---|
| முழு பக்கம் | ரூ. 5,000 (கறுப்பு/வெள்ளை) |
| 1/2 பக்கம் | ரூ. 2,500 (கறுப்பு/வெள்ளை) |
| 1/4 பக்கம் | ரூ. 1,250 (கறுப்பு/வெள்ளை) |
| இரு பத்தி | ரூ. 500 |
| ஒரு பத்தி | ரூ. 250 |

## கார்த்திகை மாதத்தின் சிறப்பு

அறநிலையத்தின் புரவலர் **திருமதி உஷா சுவாமிநாதன்** அவர்கள் கார்த்திகை மாதத்தின் சிறப்பையும், தீபத்தின் பலனையும் பற்றி விளக்கமாக இங்கு கூறியுள்ளார்.

கார்த்திகை மாதத்தின் சிறப்பு என்னவென்றால், அந்த மாதத்தில்தான் நாம் திருக்கார்த்திகை என்னும் தீபத்திருநாளாகக் கொண்டாடுகிறோம். திருவண்ணா மலையில் ''அண்ணாமலை தீபம்'' என்று விமரிசையாகக் கொண்டாடுகிறார்கள். அக இருளை நீக்கி திருவருளைப் பெருகக்கூடிய புனிதநாள் ''கார்த்திகை தீப'' நன்னாளாகும். ஒருநாள் விளையாட்டாக பார்வதி சிவபெருமானின் கண்களைத் தன் கைகளால் மூடினாள். அது ஷண நேரம் தான். ஆனால் அதன் விளைவுகளோ பூமியில் கடுமையாக இருந்தன. ஜீவனான சிவன் ஒவ்வொரு ஆன்மாவின் உள்ளுக்குள் இருப்பதால் தான் உலக இயக்கம் நடைபெறுகிறது. சகல ஜீவராசிகளுக்கு ஜீவனாக இருக்கும் சிவபெருமானின் கண்களைப் பொத்தினால் உலகம் ஸ்தம்பித்காமல் என்ன செய்யும்! மிகுந்த கோபத்துடன் சிவபெருமான் பார்வதியை பூமிக்கு செல்லுமாறு சபித்தார். பிறகு பார்வதி, சிவனிடம் தன்னை மன்னிக்குமாறும், தன்மீது கருணை வைக்குமாறும் வேண்டினாள். சிவபெருமான் சாந்தமாகி, பார்வதியை காஞ்சிபுரத்தில் தவம் செய்து தன்னை வந்து அடையுமாறு கூறினார். அங்கே பார்வதி தேவி, மண்ணினால் சிவிலிங்கத்தைப் பிடித்து வைத்து பூஜை செய்து, கடுந்தவம் செய்து வந்தாள். பார்வதியின் தவ வலிமையைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் அவள் முன் தோன்றி, அவளைத் திருவண்ணாமலைக்குச் செல்லுமாறு பணித்தார். பார்வதி தேவியும் பவழக்குன்ற மலையில் தன்னுடைய தவத்தைத் தொடர்ந்தாள். ஒரு கார்த்திகை பௌர்ணமி தினத்தன்று அருணாசலேஸ்வரர் ஜோதி ரூபமாக பார்வதி தேவியைத் தன்னுள் அடக்கிக் கொண்டு அர்த்தநாரீஸ்வரராகக் காட்சி அளித்தார். பார்வதி தேவிக்கு இடப்பாகம் கொடுத்தார். இன்றும் திருவண்ணாமலை ஆலயத்தில் சுவாமி சன்னதியின் இடப்பாகத்தில் அம்பிகை சன்னதியைக் காணலாம். அந்த நாளை ''அண்ணாமலை தீபம்'' என்ற மாபெரும் புனித விழாவாகக் கொண்டாடுகிறார்கள். இலட்சக்கணக்கான அன்பர்கள், பக்தர்கள் அன்புக் காணிக்கையாக அளிக்கும் நெய்யினால், அருணாசலமலை உச்சியில் தீபம் ஏற்றப்படுகிறது.

கார்த்திகை பௌர்ணமியன்று எல்லா சிவாலயங்களிலும் தீபம் ஏற்றிக் கொண்டாடுகிறார்கள். நம் மாடம்பாக்கத்திலும், பதினெண் சித்தர் சக்தி பீடத்தில், பௌர்ணமியன்று விசேஷமாக நவாவரண பூஜைகள் செய்து, தீபங்கள் ஏற்றிக் கொண்டாடுகிறார்கள். அந்நன்னாளில் சித்தர்களை ஒன்பது முறை வலம் வந்தால் அண்ணாமலையில் கிரிவலம் செய்வதற்கு ஈடாகும். திருவண்ணாமலை செல்ல முடியாதவர்கள் இங்கு பதினெண் சித்தர்களை வலம் வந்து பலன் பெறலாம்.

## மகானும் பதினெண் சித்தர்களும்

குடிசைகளெல்லாம் கோபுரங்களாக மாறிவிட்டது மகானின் அருளால் கருங்கல் கட்டிடத் திருப்பணிகள் முடிந்து கோபுரங்களாக மாறி கும்பாபிஷேகமும் மிக விமரிசையாக நடைபெற்றது. கருங்கல் கட்டிட திருப்பணிக்கு **தங்களால் இயன்ற பொருளுதவி செய்த அனைத்து அன்பர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**



கும்பாபிஷேகம் முடிந்து மண்டலாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றது. உள்பிரகாரம், வெளிபிரகாரத்தின் மதில்சுவர்கள், இலவச மருத்துவமனை, மூலிகைத் தோட்டம், முதியோர் இல்லம் மற்றும் இதர திருப்பணி நடைபெறவுள்ளது. இவையனைத்திற்கும் உதவிசெய்து சித்தர்களின் அருளைப் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நன்கொடைகளுக்கு வருமான வரி விலக்கு 80-G உண்டு**

எண். 1, சன்னதி தெரு, மாடம்பாக்கம்,
சென்னை-73.
போன் : 044-22281408,22280407, 29710972.

பஸ் ரூட் : தாம்பரத்திலிருந்து 51G, 51K தி.நகரிலிருந்து 5A cut service
இறங்குமிடம் : சிவன் கோயில்

நிர்வாக அலுவலகம் : பழைய எண். 21/3, புதிய எண். 43, அலமேலு மங்காபுரம்,
மயிலாப்பூர், சென்னை - 600 004. தொலைபேசி : 044-24938734, 24953793

## நேயர்களின் கவனத்திற்கு

நீங்கள் தோட்டக்கலையில் விருப்பம் உள்ளவரா? சக்திபீட பிருந்தாவனத்தில், குருஜியின் மனைவி திருமதி ராதா சர்மா அவர்கள் காய்கறி செடிகள், தோட்டம் போடுவதற்கு உண்டான, வழிமுறைகளை செய்துகொண்டு இருக்கிறார்கள். தோட்டக்கலையில் விருப்பம் உள்ள அன்பர்கள், இளம் கன்றுகள், தென்னங்கன்றுகள், செடிகள், விதைகள் ஆகியவை கொடுத்து உதவலாம். அதிலும் முக்கியமாக சேனைக் கிழங்கு, கருணைக் கிழங்கு, சேப்பம் கிழங்கு கன்றுகள் தேவைப்படுகிறது. அதில் பங்கேற்றும் மனமகிழ்ச்சி அடையலாம். மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 9962047471

## இலவச மருத்துவ முகாம் 10-ம் ஆண்டு நிறைவு விழா





16-08-2009 அன்று சத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் பிருந்தாவன அறநிலையம் கடந்த பத்துவருடங்களாக ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் தவறாமல் நடத்திவரும் இலவச மருத்துவ முகாமின் 10-ம் ஆண்டு நிறைவு விழா இனிதே நடைபெற்றது. அத்துடன் அன்று நமது பிருந்தாவன அறநிலையமும், இந்துமிஷன் மருத்துவமனையும் இணைந்து மிகச் சிறப்பான இலவச மருத்துவ முகாமை இனிதே நடத்தியது.

குருஜி சர்மா அவர்களின் ஆசியுடன் டாக்டர் நாராயணன் அவர்கள் தலைமையில் செயல்பட்டுவரும் மருத்துவர்கள் டாக்டர் ஆனந்த் பிரதாப் (சைக்காலஜி), டாக்டர் குமரகுரு (பொது), டாக்டர் காமராஜ் அவர்களையும், மருத்துவ முகாமின் ஒருங்கிணைப்பாளர் திருமதி பிரேமா ராம்குமார், திருமதி கஸ்தூரி (நர்ஸ்), திருமதி குமாரி (உதவியாளர்), ஆகியோரையும் இலவச மருத்துவ முகாமின் தலைவர் திரு. ரவீந்திரநாத் அவர்கள் (தொழிலதிபர் மும்பை) திரு. ராம்சங்கர் அவர்கள் (தொழிலதிபர், மாடம்பாக்கம்) பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்கள். திரு. இரவீந்திரநாத் அவர்கள் இலவச மருத்துவமனையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டது எங்களுக்கெல்லாம் மிகவும் மகிழ்ச்சியளிக்கிறது.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட திரைப்படக் கவிஞர் பிறைசூடன் அவர்கள், மருத்துவர்களையும், அவர்களின் சேவை களையும் பாராட்டியதோடு, குருஜி அவர்களின் ஆன்மீகத் தொண்டையும், சமூகநல மனத நேயத் தொண்டையும் மனம் நெகிழ்ந்து பாராட்டி சிறப்புரை யாற்றினார். திருமதி. ராதாசர்மா அவர்கள் குத்துவிளக்கேற்ற குருஜி சர்மா அவர்கள் தலைமை ஏற்க, அறநிலைய உபதலைவர் திரு. மருதபரணியின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவு பெற்றது. கூடிய விரைவில் +1, +2 படிக்கும் மாணவ, மாணவியர்களுக்கு Counselling முறையில் அவர்களுக்கு இருக்கும் தாழ்வு மனப்பான்மையை நீக்கி அவர்களை உயரவைத்து பார்ப் பதற்கு ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதுவரை பல்லாயிரக்கணக் கான மக்கள் ஸத்குரு ஸ்ரீ சேஷாத்ரி ஸ்வாமிகள் பிருந்தாவன அறநிலையம் நடத்தும் இலவச மருத்துவ முகாமின் மூலம் பயனடைந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நேரத்தில் குருஜி சர்மா அவர்கள் ஆசியுடன் இலவச மருத்துவ முகாம் உருவாகக் காரணமான ''அமரர்'' திரு. ராம்குமார் அவர்களை நன்றியுடன் நினைவு கூறுகிறோம். **- திரு. மருதபரணி**

## சக்திபீடத்தில் நவராத்திரி விழா

மாடம்பாக்கம் பதினெண் சித்தர் சக்திபீடத்தில் நவராத்திரி விழா ஒன்பது நாளும் மிக சிறப்பாக நடைபெற்றது. தினமும் காலை குருஜி அவர்கள் நவாவரண பூஜையை மிகவும் சிறப்பாக செய்தார். சுவாசினிக்கு தாம்பூலம் கொடுத்து பூஜையை நிறைவேற்றினார். ஒவ்வொருநாளும் சுவாசினிகள், ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமமும், ஸ்ரீ அபிராமி அந்தாதியும் பாராயணம் செய்தார்கள். அதுதவிர குரோம்பேட்டை யிலிருந்தும், வேளச்சேரியிலிருந்தும், கே.கே. நகரிலிருந்தும் இருக்கின்ற மகளிர் மன்றங்களிலிருந்து பெண்கள் வந்திருந்து, அம்பிகையை துதித்துப் பாடினார்கள். ஸத்குருவின் சூட்சும ஆணைப்படி அன்னதானமும் சிறப்பாக நடைபெற்றது. வந்திருந்த அனைத்து சுவாசினிகளுக்கும், சௌபாக்கிய திரவியங்கள், வெற்றிலை, பாக்கு, பழத்துடன் அறநிலையத்தினர் தாம்பூலம் கொடுத்து மகிழ்ந்தனர். சக்தி பீடத்தில் ஒரே சக்தி மயமாக பார்ப்பதற்கே கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. 20-9-09 ஞாயிறன்று ஸ்ரீ சண்டி ஹோமம் வெகுவிமரிசையாக நடைபெற்றது. சண்டி ஹோமத்திற்கு தேவையான திரவியங்கள் அன்பர்கள் கொடுத்து உதவினர். அது மட்டுமின்றி நங்கநல்லூரிலிருந்து வந்திருந்த அன்பர்கள் யாவரும் ஸ்ரீ நவாவரண கீர்த்தனையை மிகவும் அழகாக அம்பிகையை மனதில் நிறுத்தி பாடினார்கள். சக்தி பீடத்தில் பணிபுரியும் அர்ச்சகர்கள் அனைவரும் அம்பிகையை ஒவ்வொருநாளும், ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி, ஸ்ரீ மகிஷாசுரமர்த்தினி, ஸ்ரீ அபிராமி அலங்காரங்களை விதவிதமாக, நேர்த்தியாக அலங்கரித்த விதத்தை பார்க்கவே பரவசமாக இருந்தது. ஸத்குருவின் சன்னதிக்கு எதிரில், 9 படிக்கட்டுகள் கட்டி அதில் பலவிதமான பொம்மைகளை வைத்து அலங்கரித்திருந்தனர். திருமதி சீதா சுவாமிநாதன், திருமதி சாந்தா அவர்களின் தலைமையில் மயிலை, கே.கே. நகர் ஆகிய இடங்களிலிருந்து சுவாசினிகள் குழுவாக வந்து ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமத்தை பாராயணம் செய்தது மனதிற்கு இனிமையாக இருந்தது. மொத்தத்தில் இவ்வருடம் சக்திபீடத்தில், நவராத்திரி விழாவை, திருவிழாவாக கோலாகலமாக கொண்டாடினார்கள்.

## சஷ்டியப்தபூர்த்தி விழா

எங்கள் அறநிலைய புரவலர் திருமதி பத்மஜா அபிராமனுக்கும், திரு. அபிராமனுக்கும் சஷ்டியப்தபூர்த்தி 60 வயது திருமணம் மிகவும் விமரிசையாக 25-6-2009 அன்று நடைபெற்றது. அம்பிகையின் அருளோடும், மகானின் அருளோடும், சித்தர்களின் அருளோடும் அவர்கள் மன மகிழ்ச்சியுடன் பல்லாண்டு காலம் வாழவேண்டும் என்று பிரார்த்திக்கிறோம்.



## தர்மத்திற்கு துணை நிற்பவர்கள்

**திருமதி உஷா - திரு. ரவி (கேப்டன்)**



திருமதி உஷா, திரு. ரவி (கேப்டன்) தம்பதியினர் துபாயில் வசிக்கிறார்கள். திருமதி அனிதா சதிஷ் அவர்களால் குருஜியிடம் பரிச் சயமானவர்கள் திருமதி உஷா அவர்களிடம் தாய், தந்தை, திருமதி சியாமளா, பி.வி. சுந்தரம் அவர்களும் பழுத்த அனுபவம் உள்ள சிறந்த சேஷ பக்தர்கள். திருமதி சியாமளா அவர்கள் தன் மகளுக்கு மகானின் மகிமைகளை எடுத்துச் சொல்லி குருஜி அபுதாபி வரும்சமயம் தொடர்புகொள்ளச் சொன்னார்கள். அதேபோல் திரு. ரவி அவர்களின் பெற்றோரும் மகானிடம் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள். பரந்த உள்ளம் கொண்டவர்கள். 2001 ஆம் ஆண்டு குருஜி அவர்கள் துபாய்க்குச் சென்றசமயம், முதன்முதலாக மகானின் ஹஸ்த பூஜையை திருமதி உஷா-ரவி அவர்களின் இல்லத்தில் ஆரம்பித்து வைத்தார். அனிதா சதிஷின் துணையோடு அவர்களது பூஜை இன்றளவும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. மகானி டம் அன்புள்ளம் கொண்ட பல அன்பர்கள் இப்பூஜையில் கலந்து கொண்டு மனநிம்மதியோடு பெரும் பயனடைவதாக இத் தம்பதியினர் கூறுகின்றனர்.

திருமதி உஷா, திரு. ரவி இருவருமே உயர்ந்த உள்ளம் உடையவர்கள். பரோபகாரி, தர்ம சிந்தனை உள்ளவர்கள். சித்தர்கள் கருங்கல் கட்டிடத் திருப்பணிக்கு தாராளமாகப் பொருளுதவி செய்தவர் கள். மகானின் கொள்கைகளை தற் சமயம் துபாயில் பரப்பி வருகின்றனர். ‘‘எங்களுக்கெல்லாமே மகான்தான் மகானையும் குருஜியையும் கேட்கா மல் எந்த முடிவையும் எடுக்கமாட் டோம்’’ என்று இத்தம்பதியினர் உறுதி யாகக் கூறுகின்றனர். குருஜி அவர்கள் துபாய்க்கு விஜயம் செய்யும் சமய மெல்லாம் தங்கள் இல்லத்தில் அவரை வரவேற்று குருஜிக்கு வேண்டிய உபசரிப்புகளை செய்வதில் அவர் களுக்கு நிகர் அவர்களே. இத்தம்பதி யினருக்கு மகானின் அருளும் பரா சக்தியின் அருளும் பதினெண் சித்தர் களின் அருளாசிகளும் பொங்கட்டும். அவர்களுடைய ஆன்மீகத் திருப்பணி தொடர்ந்து, வளமுடன் வாழ வாழ்த்துகிறோம்.

## ஸ்ரீ பட்டினத்தடிகளார் சித்தர்

வணிகர் குலத்தில் பெரும் செல்வந்தராய் பிறந்த இப்பெரு மகனார், ஈசனே மகனாகக் கிடைக் கும் பாக்கியம் பெற்றார்.

ஒருமுறை மைந்தன் கொண்டு வந்த பெட்டியில், காது அறுந்து போன ஊசியும், ஒரு ஓலையில், ‘‘காது அறுந்த ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே’’, என்ற வாசகமும் எழுதி இருப் பதைக் கண்டார்.

உண்மை நிலை உணர்ந்தார். இருக்கும் செல்வங்களை இல்லா தவர்க்கு வழங்கி, துறவு வாழ்க்கை மேற்கொண்டார்.

ஒரு அரசன் இவரைத் தன் குருவாக இருக்க விழைந்தான். அதை மறுத்த சித்தர், சிவன் கோவிலின் வாசலில் தவம் இருந்தார்.

அங்கு வந்த மன்னன், ‘‘துறந்து இருப்பதில் என்ன பெருமை’’, என்றார்.

அதற்கு பட்டினத்தடிகள், ‘‘நீ நிற்க.. நான் இருக்க... அதுதான் பெருமை’’, என்றார். பெருமானின் மேன்மை அறிந்த மன்னன் இவரின் சிஷ்யனாகினான்.

ஒருநாள் தன் முன் கண்ட ஜோதியை நோக்கி இப்பெருமான், ‘‘யான் முக்தி பெறுவது எக்காலம்,’’ என்றார்.

அதற்கு இறைவன் அசரீரி யாக ஒரு கரும்பைத் தந்து ‘‘இதன் நுனி எந்தத் தவத்தில் உனக்கு இனிக்கின்றதோ அங்கு நீ முக்தி பெறுவாய்,’’ என்றார்.

பட்டினத்தார் திருவொற்றி யூர் வந்தபொழுது, அவருக்கு அக் கரும்பு நுனி இனித்தது. உடனே அங்கு கோவில் கொண்டுள்ள தியாகராஜப் பெருமானைப் பாடி பரவசம் அடைந்தார். எதிரே கடற் கரையில் விளையாடிக் கொண் டிருந்த சிறுவர்களிடம் மணலை சர்க்கரையாக்கி மகிழ்ந்தார். சிறுவர் களிடம், மணலில் ஒரு பக்கம் தன்னை மூடச்சொல்லி, மறுபக்கம் வெளிவந்தார். சிறுவர்கள் ஆச்சரியத் துடன் ஆர்ப்பரித்த பொழுது, திரும்ப வும் தன்னை மூடச் சொன்னார். உடனே அவர்களும் இப்பெருமானை மணலால் மூடினர். ஆனால் மறுபக்கம் வெளிவருவார் என்று எதிர்பார்த்து இருந்த சிறுவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. பட்டினத்தடி கள் வரவில்லை. அதுவே அவர் சமாதியானது. இப்பெருமான் எழுதிய நூல்களில் குறிப்பிடத்தக்கன, திரு விடைமருதூர் மும்மணிக்கோவை, திருஏகம்பமுடையார் திருவந்தாதி

நம் பதினெண் சித்தர் சக்தி பீட பிருந்தாவனத்தில், பன்னிரெண் டாம் சித்தராக விளங்கும் இப்பெரு மானை, ஞாயிற்றுக்கிழமைகளில் பூஜிப்பது சிறப்பு என்று மகான் அவர்கள் அருள்வாக்கில் கூறி உள்ளார். ஞாயிற்றுக்கிழமை சக்தி பீடத்திற்கு வந்து இவருக்கு ரோஜாப் பூ வண்ண வஸ்திரம் சார்த்தி அர்ச்சனை செய்து, சித்தர் பூஜை முறைகள் என்ற புத்தகத்தில் குறிப் பிட்டுள்ள பூஜைசெய்து 16 போற்றி களையும் கூறினால், சொத்து தகராறு கள் நீங்கும். புகழும், வெற்றியும் கிடைக்கும். இதயம் சம்பந்தப்பட்ட கோளாறுகள் அகலும். பக்தியோடு பட்டினத்தடிகளாரின் பாதம் பற்றி னால், புகழ் மணக்கின்ற பெருவாழ்வு பெறுவோம் என்பது உறுதி.

**- திருமதி உமாபரணி**

## *வறுமையை அடியோடு போக்கும் ஸ்ரீ கிரஹலக்ஷ்மி*

தீபாவளியன்று வரும் ஸ்ரீ லக்ஷ்மி குபேர பூஜையில், ஸ்ரீ கிருஹ லக்ஷ்மி படத்தை வைத்து பூஜை செய்யலாமே. உங்கள் வறுமையை அடியோடு களைந்து, செல்வத்தை வாரி வழங்குபவள் ஸ்ரீ கிரஹலக்ஷ்மி. உங்கள் வீட்டில் நடக்கும் விசேஷங் களில் நீங்கள் அன்பளிப்பாக ஸ்ரீ கிரஹலக்ஷ்மி படத்தைக் கொடுக் கலாமே. அவர்களுக்கு ஸ்ரீ லக்ஷ்மியை கொடுத்த புண்ணியமும் உங்களைச் சேரும்.

## சித்தர் பாலாலயத்தில் விழாக்கள்

நமது சக்திபீடத்தில் சித்தர் பாலாலயத்தில் சிறிய விழாக்கள் (அறுபதாம் கல்யாணம், பூணூல், சீமந்தம், வளைகாப்பு, காதுகுத்தல்) நடைபெறுவதற்கு அற நிலையத்தினர் இடம் ஏற்பாடு செய் துள்ளனர். ஏழை எளியவர்களுக்கு உரிய சலுகைக் கட்டணத்தைச் செலுத்தி பயனடை யுங்கள். எங்கு நடத்துவது, எப்படி செய்வது என்று குழப்பம் அடைய வேண்டாம். விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் : 94440 26989.

**ஜனவரி 7, 8, 9, 2010 அன்று-3 நாட்கள்**
**மகான் ஸத்குரு ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகளின்**
**மஹா ஆராதனை விழா சிறப்பாக**
**சக்திபீட பிருந்தாவனத்தில் நடைபெறும்.**

## டிரஸ்டின் வெளியீடுகள்

1. ஸ்ரீசக்ர மகாமேரு 18 சித்தர்கள் சக்திபீட பிருந்தாவன ஸ்தல வரலாறு (தமிழ் - ஆங்கிலம்)
2. மகான் திருவுருவம் பதித்த டாலர்கள், பேனாக்கள் மற்றும் சிறிய, பெரிய படங்கள்
3. ஸ்ரீசக்ர மஹாமேரு ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் 18 சித்தர்கள் பூஜை முறைகள்
4. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் மகாத்மியம் (தமிழ், ஆங்கிலம்)
5. ஸ்ரீகிரஹலட்சுமி (வாஸ்து தோஷம் போக்கும் படம்)
6. ஸ்ரீசேஷாத்ரி ஸ்வாமிகள் (அபூர்வ படம்)
7. ஸ்ரீ சக்ர மஹாமேரு - ஸத்குரு - பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)
7. ஸ்ரீ சக்ர மஹாமேரு - அம்பிகை - பதினெண் சித்தர் சக்திபீடம் (அபூர்வ படம்)

## அறக்கட்டளையின் இதர சமூக நற்பணிகள்

**பால் விநியோகம்:-** பிரதி ஞாயிறு தோறும் சக்தி பீட பாலாலயத்தில் குழந்தைகளுக்கு பால் விநியோகம் நடைபெறுகிறது. இந்த அரிய கைங்கர்யத்தில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் ரூ. 500/- செலுத்தி தாங்களே நேரில் வந்து கொடுக்கலாம்.

இதனால் ஏற்படும் பலன்கள் :

குழந்தைகள் நன்றாகப் படித்து அதிக மதிப்பெண்கள் பெறுவார்கள்.

தேர்வு சமயத்தில் ஏற்படும் வீண் பயம் நீங்கி மனத் தெளிவு ஏற்படும்.

தீராத வியாதிகள் தீரும், சித்தர்கள் அருள் கிடைக்கும்.

இலவச பால் விநியோகத்திற்கு நன் கொடை அளித்து ஸ்ரீ கிருஷ்ணனின் அருளையும் மகானின் அருளையும் சித்தர்களின் அருளையும் பெறுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

**நித்திய அன்னதானம்:-**சித்தர் சக்தி பீடத்தில் அன்னதானம் வழங்கப்படு கிறது.

***தானத்தில் சிறந்தது அன்னதானம்***

ஸ்ரீ சேஷ ஒளி
திருவருட்சுடர்

நிர்வாக ஆசிரியர்
**குருஜி கே.வி.எல்.என். சர்மா**

வெளியீட்டாளர்
**திரு. கே. ராமசுப்ரமணியன்**

ஆசிரியர்
**திருமதி. அருணா நாகராஜன்**

உதவி ஆசிரியர்
**திருமதி. என். ஜானகி**

கௌரவ ஆசிரியர்கள்
**திரு. மருதபரணி**
**திருமதி. உமாபரணி**
**திரு. என். நாகராஜன்**

அலுவலக உதவியாளர்
**திருமதி. பி. லக்ஷ்மி**

வடிவமைப்பு
**திருமதி. வசந்தா**

**பதிவு அலுவலகம்**
ப.எண். 21/3, பு.எண். 43,
அலமேலு மங்காபுரம், மயிலாப்பூர்,
சென்னை - 600 004.
போன் : 044-24938734, 24953793
இணைய தளம் : www.seshadri.info
Email : guruji@seshadri.info

Publisher Mr. K. RAMASUBRAMANIAM from New No. 43, Alamelumangapuram, Mylapore, Chennai - 600 004
and Printed by him at Sri Vignesh Printers, Chennai. Editor : Mrs. ARUNA NAGARAJAN